பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | மாசி 22 செவ்வாய்க்கிழமை 06.03.2018 | கதிர் 121

காலைக்கதிர்
Kalaikkathir

விளம்பர சேகரிப்பாளர் பணிக்கு ஆள்கள் தேவை.

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ள
021 222 2600, 077 311 9298, 075 313 2876

# பற்றி எரிந்தது திகண!

## முஸ்லிம்களின் கடைகள், வீடுகள் தீவைப்பு
## இன்று காலைவரை கண்டியில் ஊடரங்கு



கொழும்பு, மார்ச் 06

சிங்கள - முஸ்லிம் இனங்களுக்கிடையில் கண்டியில் நேற்றுப் பெரும் களோபரம் ஏற்பட்டுள்ளது. திகண பகுதியில் முஸ்லிம்களின் கடைகள், வீடுகள் என்பன தீ வைத்து எரிக் கப்பட்டன. வாகனங்களும் தீக்கி ரையாகின. முஸ்லிம்களின் சொத் துக்கள் சூறையாடப்பட்டன. இத னால் கண்டி நேற்றுப் பெரும் அல் லோலகல்லோலப்பட்டது.



இதனையடுத்து கண்டி முழுவ தும் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது.

பக்கம் 18 »

## மீண்டும் கலவரம் வெடிக்கும் ஆபத்து!

### திஸ்ஸ விதாரண எச்சரிக்கை



கொழும்பு, மார்ச் 06

நாட்டில் மீண்டும் தலைதூக்கியுள்ள இனவாதத்தைக் கட் டுப்படுத்தாவிட்டால், நாடு பேரழிவைச் சந் திக்கும்.

- இவ்வாறு

பக்கம் 18 »

## சுயாதீன விசாரணை; ஜனாதிபதி பணிப்பு



கொழும்பு, மார்ச் 06

கண்டி - திகண பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற தாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற தும், சுயாதீனமா னதுமான விசா ரணையை ஆரம்

பக்கம் 18 »

## பாதுகாப்பு உயர்சபையை உடனடியாகக் கூட்டுங்கள்

### ஜனாதிபதியிடம் ரிஷாத் வேண்டுகோள்

கொழும்பு, மார்ச் 06

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக் கும் அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு பாதுகாப்பு உயர்

பக்கம் 03 »

## பரபரப்பான சூழலில் கூடும் நாடாளுமன்றம்

கொழும்பு, மார்ச் 06

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள நம் பிக்கையில்லாப்

பக்கம் 18 »

## முஸ்லிம்களை மையமாக்கி இனக்கலவரம் தூண்டச் சதி!

### ஹக்கீம் கடும் கண்டனம்



கொழும்பு, மார்ச் 06

நாட்டின் முஸ்லிம் சமூகத்தை மையப் படுத்திச்சில இனவாதக் குழுக்கள் இனக்கல வரத்தைத் தூண்ட முயற்சிக்கின்றன என அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸின்

பக்கம் 03 »

## தேர்தலில் கூட்டமைப்புக்கு பின்னடைவு உண்மைதான்!

### கூறுகிறார் மாவை சேனாதிராசா



கிளிநொச்சி, மார்ச் 06

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்னடைவைச் சந்தித்துள் ளதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார்

பக்கம் 18 »

## பதற்றத்தால் மூடப்படும் கண்டிப் பாடசாலைகள்

கொழும்பு, மார்ச் 06

கண்டி நிர்வாக மாவட்டத் துக்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளுக்கும் இன்று விடுமுறை வழங் கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்

பக்கம் 18 »

## ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய போட்டி?

### ராஜபக்ஷ குடும்பம் கூடி ஆராய்வு



கொழும்பு, மார்ச் 06

2020 ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷவை நிறுத்து வதற்கு ராஜபக்ஷ குடும்பத்தினர் கூடி ஆராய்ந்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கை அரசியலில்

பக்கம் 18 »

## சிரியப் படுகொலைகளுக்கு வடமராட்சியில் கண்டனம்!




யாழ்ப்பாணம், மார்ச் 06

சிரியப் படுகொலைகளுக்கு எதிராக நேற்று வடமராட் சியில் கவனவீர்ப்புப் பேரணி நடத்தப்பட்டது.

தொண்டைமானாறு முதல்

பக்கம் 03 »

## இராணுவத்துக்கு புதிய கட்டுப்பாடு!

### சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கு

கொழும்பு, மார்ச் 06

இலங்கை இராணுவத் தைச் சேர்ந்த அதிகாரி களும், படையினரும், சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்குப் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டுள்ளன. இது தொடர் பாக இலங்கை இராணு வத் தளபதி லெப். ஜென ரல் மகேஸ் சேனநாயக்க

பக்கம் 03 »

## இது ரகசியம் அல்ல!

அண்மைக் காலம் வரை அமைதியாகவும் சத்தம் சந்தடியின்றியும் அபாரப் பணியாற்றிய யாழ். இந்தி யத் துணைத்தூதுவர் நடராஜன் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலையிலேயே யாழ்ப்பாணப் பணி முடிந்து தாயகம்

பக்கம் 03 »

# சர்வதேச மகளிர் தினத்தன்று முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர் போராட்டம்!

ஓராண்டு பூர்த்தி நாளில்



முல்லைத்தீவு, மார்ச் 06

சர்வதேசமகளிர்தினத்தன்று முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பெரும் கவனவீர்ப்புப் போராட்டத்திலீடுபடபோவதாக அறிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மேற்கொண்டு வரும் போராட்டம் எதிர்வரும் எட்டாம் திகதி ஓர் ஆண்டு நிறைவை அடைகிறது.

கடந்த ஓர் ஆண்டாக மேற்கொள்ளப்பட்டு வந்த போராட்டத்தின் ஓர் ஆண்டு நிறைவான எதிர்வரும் 8 ஆம் திகதி ஓராண்டை நிறைவிற்கு கொண்டுவரும் இந்த வேளையில் இதுவரையும் அரச பிரதிநிதிகளிடமும், அரசிடமும் எடுத்துக்காட்டி எந்த தீர்வுகளும் கிடைக்காத சந்தர்ப்பத்தில் எங்களின் பிரச்சினையை சர்வதேசத்திற்கு எடுத்துக் காட்டவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமைகள் கூட்டத்திலும் காணாமல் போனவர்களின் விடயங்கள் சாட்சியங்களாகப் போகவேண்டும் என்றநிலை இன்றுகாணப்படுகின்றது.

இந்த நிலையில், ஓர் ஆண்டைநிறைவிற்கொண்டு சர்வதேசம் எங்களைத் திரும்பிப் பார்க்கவேண்டும், அரச பிரதிநிதிகள் திரும்பிப் பார்க்க வேண்டும். ஒரோ தீர்வைநேரடியாக எங்களுக்குத் தரவேண்டும் என்று எதிர்பார்க்கும் இந்த வேளையில் எதிர்வரும் 08 ஆம் திகதி போராட்டம் ஒன்றுக்கு அறைகூவல் விடுக் கின்றோம் .

வடக்கு கிழக்கில் உள்ள தமிழ்மக்களின் அரசியல் பிரதி நிதிகள்,வர்த்தக சங்கங்கள், நலன் விரும்பிகள்,பொது அமைப்புக்கள்,மதகுருமார்கள் என அனைத்து உறவுகளும் வந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின்உறவுகள்ஆகிய எங்களின் பிரச்சினையை உலகுக்குஎடுத்துரைக்கஅனைவரையும் அழைக்கின்றோம் என்றும் தெரிவித்த காணாமல், ஆக்கப்பட்டோர்களின் உறவினர்கள் எதிர்வரும் 08 ஆம் திகதி நடைபெற இருக்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளான எங்களின் போராட்டம் உலகுக்கு தெரியப்படுத்த வேண்டும். சர்வதேசம் தான் எங்களுக்கான முடிவைப் பெற்றுத் தர வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

## காளான்கள் போல முளைக்கும் சீன வாணிப நிலையங்கள்!

### ஜனாதிபதி மைத்திரி அதிருப்தி

இலங்கை முழுவதும் காளான்களைப் போல முளைத்துக் கொண்டிருக்கும், சீன வாணிப நிலையங்கள் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே ஜனாதிபதி இதுகுறித்து கரிசனை வெளியிட்டுள்ளார்.

கொழும்பு மற்றும் கண்டியில் சீன வாணிப நிலையங்கள் அதிகரித்துள்ளமை குறித்தும், சீன வாணிப நிலையங்களின் உரிமையாளர்கள் சுகததாச அரங்கில் நாளை நடத்தவுள்ள ஒன்று கூடல் தொடர்பாகவும், அதிருப்தி வெளியிட்டுள்ள ஜனாதிபதி, இது உள்ளூர்வாணிப நிலையங்களின் உரிமையாளர்களுக்குப் பாதகமானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், முன்னாள் நிதியமைச்சர் எடுத்த நடவடிக்கைகள், காரணமாக நாட்டின் சிறிய வாணிப நிலையங்களின் உரிமையாளர்கள் அரசின் மீது அதிருப்தியடைந்துள்ளனர் என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

அதேவேளை, இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, 2001ஆம் ஆண்டில் இருந்தே சீன வாணிப நிலையங்களின் திறப்பு ஆரம்பமாகிவிட்டது என்று நினைவுபடுத்தியுள்ளார்.

## கிளிநொச்சியில் அதிக பனிமூட்டம்!



கிளிநொச்சி, மார்ச் 06

வழமைக்கு மாறாக நேற்று கிளிநொச்சியில் அதிக பனி மூட்டமாகக் காணப்பட்டது.

பகல் வேளைகளில் அதிக வெப்ப நிலையும் இரவு தொடக்கம் காலை வரை அதிக பனி மூட்டமும் காணப்படுகிறது. ஓரளவுக்க மலை நாட்டுப் பிரதேசங்கள் போன்று கிளிநொச்சியின் இன்றைய காலைப் பொழுது காணப்பட்டது.

காலை பாடசாலை மாணவர்கள் மற்றும் பலவேறு பணிகளுக்கு செல்லும் பொது மக்கள் சிரமங்களுக்குள்ளாகினர். சில இடங்களில் பஸ்கள் அருகில் வரும் வரைக்கும் தெரியாமல் இருக்குளம் அள வுக்கு பனி மூட்டம் நிலவியது. (க-71)

## கத்தி வெட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சந்தை வியாபாரிகள் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சியில் நேற்று



கிளிநொச்சி பொதுச்சந்தையின் மரக்கறி வியாபாரி ஒருவரை கத்தியால்வெட்டிப் படுகாயத்தை ஏற்படுத்திய சம்பவத்திற்கு எதிர்புத் தெரிவித்து சந்தை வியாபாரிகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி பொதுச் சந்தையில் மரக்கறி வியாபாரி ஒருவரை கத்தியால் வெட்டி படுகாயத்தை ஏற்படுத்திய சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று கிளிநொச்சி பொதுச்சந்தை வியாபாரிகள் காலை முதல் ஒன்பது மணி வரை எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

கத்திவெட்டு எம் கலாசாரத்தை சீரழிக்கும், சந்தையின் பாதுகாப்பு யார்கையில்,தனிநபர்வாள்வெட்டு தமிழின சாபக்கேடு, வயிற்றுப் பசியை தீர்க்க வந்த நாம் வாள் வெட்டுக்கு இரையாவதா போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.



இதேவேளை, சம்பவ இடத்திற்கு வருகைதந்த கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் க.கம்சநாதன் வியாபாரிகளின் உணர்வுகளை மதிக்காது பூட்டியிருந்த சந்தையின் கதவுகளை திறந்து உற்பத்தியாளர்களை உள்ளே விட்ட சம்பவம் வியாபாரிகளை மனதளவில் பாதித்துள்ளது என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனாலும், முன்னறிவித்தல் இன்றி சந்தை வர்த்தகர்கள் சந்தையினை பூட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டமையானது தொலைவில் இருந்து தங்களின் உற்பத்திப் பொருள்களுடன் சந்தைக்கு வந்த உற்பத்தியாளர்களை பெரிதும் பாதித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மூன்றாகப் பிளவுபட்டுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி

கொழும்பு, மார்ச் 06

உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் கடும் விரிசல்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் மூன்று விதமான நிலைப்பாடுகள் தோன்றியுள்ளன என தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் கணிசமானவர்கள், மீண்டும் மஹிந்த ராஜபக்சவுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்.

அதேவேளை, அதே எண் ணிக்கையான உறுப்பினர்கள் சில உள்ளக விட்டுக்கொடுப் புகளுடன், கூட்டு அரசில் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி வருகின்றனர்.

எனினும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஏழு நாடா ளுமன்ற உறுப்பினர்கள், தமது எதிர்கால அரசியல் கருதி, ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ள முயற்சிக்கின்றனர்.

தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 43 நாடாளுமன்ற உறுப்பி னர்கள், கூட்டு அரசின் பங்காளிகளாக இருந்து வருகின்றனர்.

இதிலிருந்து விலக விரும்புவோர், தமது நிலைப்பாட்டை ஏற்கனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தெரிவித்துள்ளனர்.

இவர்களை ஒரு மாத காலம் பொறுத்திருக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் கால்பந்தாட்ட அணி மீது தாக்குதல்

தென்மராட்சிக் கல்வி வலய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றிருந்த சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்கள், கும்பல் ஒன்றால் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்தனர். இதனால் ஏற்பட்ட பதற்றத்தால் கால்பந்தாட்டம் மற்றும் கபடிப் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 3 மணியளவில் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். எனினும் தென்மராட்சிக் கல்வி வலய அதிகாரிகள் சம்பவம் தொடர்பில் உரிய நடவடிக்கையை எடுக்கவில்லை என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தென்மராட்சிக் கல்வி வலய மட்ட விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் கால்பந்தாட்டப் போட்டிகள் வரணி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்றன. இதில் ஆண், பெண் இரு பிரிவினருக்குமான போட்டிகள் நடைபெற்று வந்தன.

20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கால்பந்தாட்டக் காலிறுதிப் போட்டியில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய அணியைச் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி வெற்றிகொண்டு அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

அரையிறுதிப் போட்டி நேற்று நடைபெறவிருந்த நிலையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியின் வீரர்கள், மைதான வளாகத்தில் வைத்துக் கும்பலொன்றால் தாக்கப்பட்டனர்.

சம்பவத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியின் சிறந்த வீரரான தவராசா குபேரன் மற்றும் அந்த அணியின் பயிற்சியாளர் துரை விதுன் ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர்.

அவர்கள் இருவரும் உடனடியாகச் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். சம்பவம் தொடர்பில் தென்மராட்சிக் கல்வி வலயத்துக்கும் பொலிஸ் அவசர பிரிவுக்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபரால் அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். எனினும் தென்மராட்சிக் கல்வி வலய அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்தச் சம்பவத்தையடுத்து ஏற்பட்ட பதற்றத்தால், சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் 16 மற்றும் 20 வயதுக்குட்பட்ட அணிகள் அரையிறுதிப் போட்டியில் பங்கேற்காமல் திரும்பின. அதனால் ஆண்கள் பிரிவு கால்பந்தாட்டப் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டன.

மேலும் கச்சாய் அ.த.க. பாடசாலை மைதானத்தில் இன்று நடைபெறவிருந்த கபடிப் போட்டிகளும் ஒத்திவைக்கப்பட்டன என்று அறிவிக்கப்பட்டது. (ஐ)

# ஐ. நா. தூதுவர் இன்று வடக்குக்கு வருகிறார்

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், மார்ச் 06

ஆள்களுக்கு எதிரான கண்ணி வெடிகளைத் தடை செய்யும் பிரகடனத்தின் ஐ.நாவின் சிறப்புத் தூதுவர் இளவரசர் மிரெட் ராட் சையிட் அல் ஹுசைன் இன்று வடக்குக்கு வருகை தருகிறார்.

இலங்கைக்குக் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வந்த தூதுவர், பல தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இன்று கொழும்பிலிருந்து அவர் கிளிநொச்சிக்கு வருகை தருகிறார்.

இன்று காலையில் கிளிநொச்சிக்கு வருகை தரும் அவர் முகமாலைப் பகுதிக்குச் சென்று கண்ணிவெடி அகற்றும் பகுதிகளையும் சென்று பார்வையிட உள்ளதுடன், கண்ணிவெடி அகற்றும் பிரிவினரையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பளை – இந்துபுரம் பகுதிக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிடவுள்ளதுடன் அப்பகுதி மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

தூதுவருடன் மீள்குடியேற்ற அமைச்சர் உள்ளிட்ட சில அமைச்சுக்களின் செயலாளர்கள், அதிகாரிகள் பலரும் வருகை தருகின்றனர்.

இதன் பின்னர் ஐ.நா. தூதுவர் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார். (ஐ-7)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புறப்படுகின்றார். ஒரு நாட்டின் சார்பில் இன்னொரு நாட்டில் ஒரே சமயத்தில் இரண்டு தூதுவர்கள் இருக்க முடியாது. அது ராஜதந்திர மரபு. பதவி விலகும் தூதுவர் அந்தப் பணிக்கான நாட்டிலிருந்து தூதுவர் அந்தஸ்தோடு வெளியேறிச் சென்ற பின்னர்தான், அதே அந்தஸ்துடன் புதியவர் அங்கு வர முடியும். ஒரு பிரதேசத்துக்குப் பொறுப்பாகவிருக்கும் துணைத் தூதுவர் விடயத்திலும் இது பொருந்தும்.

அந்த வகையில், துணைத் தூதுவர் நடராஜன் வியாழன் காலை புறப்பட, மாலையில் புதிய துணைத்தூதுவர் யாழ். வந்து சேருவார் என்கின்றன சம்பந்தப்பட்ட வட்டாரங்கள். ஆனால் புதிய துணைத்தூதுவர் யார் என்பது குறித்துக் கூட இன்னும் அதிகம் செய்திகளோ, பேச்சோ இங்கு அடிபடாமை ஆச்சரியம்தான்.

இதுவரை காலமும் – யாழ்ப்பாணத்தில் துணைத் தூதரகத்தை இந்தியா திறந்த காலத்தில் இருந்தே – இங்கு துணைத் தூதுவர்களாகத் தமிழர்களே அனுப்பப்பட்டனர். ஆரம்பத்தில் மகாலிங்கம், இடையில் சிறிது காலம் பதில் பொறுப்பில் மூர்த்தி, கடைசியாக நடராஜன். கடந்த ஆறு, ஏழு ஆண்டுகளாகவும் தமிழர் ஒருவரையே யாழ்ப்பாணத்துணைத்தூதுவராக இந்தியா நியமித்து வந்துள்ளது என்பதை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனே ஒன்றுக்கு இரண்டு தடவைகள் சிலாகித்துக் கூறியிருந்தார்.

இப்போது வரப்போகின்றவர் எஸ்.பாலசந்திரன் என்ற அதிகாரி. ஆனால் அவர் தமிழர் அல்லர் தெலுங்கர். ஆனால், தமிழும் பேசக் கூடியவர். அதனால் அவருக்கு முன்னையோரை வரவேற்றமாதிரி புதிய துணைத் தூதுவர் பாலச்சந்திரனையும் யாழ்ப்பாணம் முழு மனதுடன் வரவேற்கும் என்று கூறலாம்.

புதிய துணைத் தூதுவர் குறித்து ஓர் உள்வீட்டுத் தகவல் கசிந்துள்ளது.

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் இவர் சீனாவின் ஷங்காய் நகரில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் இராஜதந்திர அதிகாரியாகச் செயற்பட்ட போது அந்தச் சம்பவம் நடந்தது.

யீவு என்ற நகரத்தில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்ட ஓர் இந்தியத் தரப்பினர் அங்குள்ள சீன வர்த்தகர்கள் சிலருக்கு கொடுக்குமதி நிலுவையைச் செலுத்தாமல் கம்பி நீட்டி விட்டனர் என்று கூறப்படுகின்றது. அதனால் சீற்றமுற்ற உள்ளூர் சீன வர்த்தகர்கள் அந்த இந்தியத் தரப்பினருக்காகப் பணியாற்றிய இரண்டு இந்திய ஊழியர்களைப் பிடித்து பணயக் கைதிகளாகத் தடுத்து வைத்திருந்தனர்.

2011 டிசெம்பர் 31 ஆம் திகதி உள்ளூர் நீதிமன்றத்தில் இந்த இரு இந்திய ஊழியர்களுக்காகவும் சுமார் ஐந்து மணி நேரம் கடுமையாக வாதாடி, போராடி, அவர்களை வெற்றிகரமாக விடுவித்து அழைத்துச் செல்ல முயன்றார் இராஜதந்திரியான பாலச்சந்திரன். அச்சமயம் நீதிபதியும், பொலிஸாரும் பார்த்திருக்க நீதிமன்ற வளாகத்தில் வைத்தே நையப்புடைக்கப்பட்டார் பாலச்சந்திரன். இதனால் மயக்கமடைந்த பாலச்சந்திரன் பின்னர் வைத்தியசாலைக்குக் கொண்டு விரையப்பட்டார்.

மேற்படி இரு ஊழியர்களும் பணியாற்றிய இந்திய நிறுவனத்தினர் தங்களிடம் பொருள்கள் கொள்வனவு செய்த வகையில் கொடுக்க வேண்டிய பல மில்லியன் யுவான் பணத்தைத் தங்களிடம் ஒப்படைக்காமல் அந்த இரு ஊழியர்களையும் விடுவித்து, அழைத்துச் செல்லக் கூடாது என்று ஆக்ரோஷப்பட்டே உள்ளூர் சீன வர்த்தகர்கள் இந்தத் தாக்குதலை நடத்தினர்.

தமது இராஜதந்திரி ஒருவர் தாக்கப்பட்ட இந்தச் சம்பவத்தை பாரதூரமான ஒரு விடயமாக எடுத்துக் கொண்ட இந்தியா, இது குறித்து சீனாவுடன் கடும் இராஜதந்திர உரசுப்பாடுகளில் ஈடுபட்டு முட்டி மோதியது. புதுடில்லியில் உள்ள சீனத் தூதரகத்தின் பிரதித் தூதரைத் தனது வெளிவிவகார அமைச்சுக்கு அழைத்து உத்தியோகபூர்வமாகக் கடும் கண்டனத்தை வெளியிட்டது புதுடில்லி அரசு.

இப்படி சீன உள்ளூர் வர்த்தகர்களுக்கு மத்தியில் தனித்துத் துணிந்து நின்று மோதியபோது பாலச்சந்திரனுக்கு வயது 46 மட்டும்தான். இப்போது ஏழு ஆண்டுகள் கழித்து 53 வயதில் யாழ்ப்பாணத் துணைத் தூதுவராக அவர் வருகின்றார்.

ஷங்காய் தூதரகப் பணிக் காலத்தில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் அவருக்கு இங்கு யாழ்ப்பாணத்தில் கிடைக்காது. அவர் எதிர்கொள்ளப் போகும் யாழ்ப்பாண அனுபவங்கள் பசுமையாக அவர் மனதில் நிலைகொள்ளத்தக்கவையாக அமையும் என நம்புகிறோம்.

மகாலிங்கமும் மூர்த்தியும் அத்தகைய நிறைவான மன மகிழ்வோடுதான் இங்கு தமது பணியைப் பூர்த்தி செய்தார்கள். அப்படித்தான் நடராஜனும் பூர்த்தி செய்கின்றார். அதே நிறைவான – மகிழ்வான – அனுபவம் இங்கு புதிய துணைத் தூதுவராக வரும் பாலச்சந்திரனுக்கும் கிடைக்கும் என்று நம்புகிறோம்.

-மின்னல்-

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையைக் கூட்டுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், அமைச்சர் ரிஷாட் பதியுதீன் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு எழுதியுள்ள அவசர கடிதத்திலேயே அவர் இவ்வாறு கோரியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:–

அம்பாறைப் பிரதேசத்தில் தொடங்கிய வன்முறைச் சம்பவங்கள் இப்போது கண்டி மாவட்டத்தில் பரவி, அங்குள்ள பள்ளிவாசல்கள் சேதப்படுத்தப்பட்டு, முஸ்லிம்களின் வியாபார நிலையங்கள் மற்றும் சொத்துக்கள்வரை அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. முஸ்லிம்கள் வாழும் குடியிருப்புக்கள் மீது சரமாரியாகக் கல் வீச்சுத் தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளன. முஸ்லிம்கள் பலர் தாக்கப்பட்டுக் காயத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

கண்டி – திகண பிரதேச முஸ்லிம்கள் வெளியேவர முடியாது வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கின்றனர். எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற அச்சத்தில் அவர்கள் இருக்கின்றனர். 30 வருட பேரழிவின் பின்னர் நாட்டிலே சமாதானம் ஏற்பட்டு இனங்களுக்கிடையில் நல்லுறவு வளரும் இந்தச் சந்தர்ப்பத்தில், இனவாதச் சக்திகள் சமூகங்களுக்கிடையே குரோதங்களை ஏற்படுத்தி, நாட்டில் அமைதியின்மையைத் தோற்றுவிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

இனங்களுக்கிடையே இவ்வாறான முரண்பாடுகளைத் தோற்றுவித்து, நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி பொருளாதாரத்தைப் பலவீனம் அடையச் செய்வதன் பின்னணியாகவே இந்தத் தீய சக்திகளின் செயற்பாடுகளைக் கருத வேண்டும்.

பள்ளிவாசல்களும், முஸ்லிம்களின் சொத்துக்களும் குறிவைக்கப்பட்டு தாக்கப்படுவது, இனவாதிகள் அந்தச் சமூகத்தின் மீதுகொண்ட காழ்ப்புணர்வின் காரணத்தினாலேயே என்று புலப்படுகின்றது.

இந்த நிலை தொடர்ந்து நீடிக்குமேயானால் நாடு அதலபாதாளத்துக்குச் செல்வது தவிர்க்க முடியாமல் போய்விடும். உடனடியாக அந்தப் பிரதேசத்தில் நீடித்த பாதுகாப்பை பலப்படுத்தி நிலைமையைப் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டியது அவசியம். – என்றுள்ளது. (ஐ)

## சிரியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறை வரை இந்தக் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது.

தொண்டைமானாறுச் சந்தியில் ஆரம்பமான பேரணி, வல்வெட்டித்துறை, பொலிகண்டி, இன்பருட்டி, பருத்தித்துறை பஸ் நிலையம் ஊடாகப் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தை அடைந்தது.

அங்கு பிரதேச செயலர் ஆ. சிறியிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது. (ஐ – 7)

## முஸ்லிம்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவருமான ரவூப் ஹக்கீம் சாடியுள்ளார்.

கண்டி – தெல்தெனிய மற்றும் திகன ஆகிய பிரதேசங்களில் வெடித்துள்ள கலவரத்தை அடுத்து, அமைச்சர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு கூறியுள்ளார்.

அமைச்சரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

சிங்கள சகோதரர் ஒருவர் மரணித்துள்ள பின்னணியில், அதைக் காரணமாகக் கொண்டு முஸ்லிம்களை மையப்படுத்தி இனக்கலவரமொன்றை உருவாக்கும் நோக்கத்தில் இனவாத சக்திகள் அங்கு ஒன்று சேர்ந்துள்ளன.

இந்நிலையில், நிலைமையை நேரில் ஆராய்ந்து உரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அமைச்சர் அங்கு விரைந்துள்ளார்.

இதேவேளை, சட்டம் ஒழுங்குக்குப் பொறுப்பான அமைச்சரான பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவைத் தொடர்புகொண்டு, சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட உரிய நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் பணித்தார்.

எனினும், சம்பவ இடத்தில் விசேட அதிரடிப்படையினரும், இராணுவத்தினரும் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு உரிய வேளையில் களமிறக்கப்படவில்லை என அமைச்சர் குற்றம் சாட்டினார். – என்றுள்ளது. (ஐ)

## இராணுவத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளார்.

இதன்படி, முகநூல், கீச்சகம் உள்ளிட்ட சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் இராணுவத்தினர், தமது பதவி நிலை மற்றும் இராணுவ அடையாளங்களையோ, சீருடையுடனான படத்தையோ, இராணுவக் கருவிகள் மற்றும் நிறுவனங்களின் படத்தையோ பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தேசிய பாதுகாப்பு, அரசியல், மதம், இன நல்லிணக்கத்துடன் தொடர்புடைய விடயங்களைப் பதிவேற்றுவதற்கும், பகிர்ந்து கொள்வதற்கும், இன்னொருவருக்கு பரிமாறிக் கொள்வதற்கும், கருத்து வெளியிடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டுப்பாடுகளை மீறும் இராணுவத்தினரைக் கண்காணிப்பதற்காக, சமிக்ஞைப் படைப் பிரிவைச் சேர்ந்த குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்கள் தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மீறும் படையினர் மீது கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஐ)

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி
அனைத்து வகையான வாகனங்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் 1, 2, 3 வருட கால உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ஒட்டித்தரப்படும்
108, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8680
077 592 5088

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## அடி சறுக்கும் மைத்திரியின் திட்டம்

பதவி ஆசை யாரை விட்டது? அது, ஏறிய ஏணியைக் கூட எட்டி உதைக்க வைக்க வல்லது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் விடயத்தில் இது நிதர்சனமாகியுள்ளது. பதவி ஆசையால் தன்நிலை தடுமாறி அவர் செயற்படுகின்றாரோ என்ற எண்ணம் இப்போது அரசியல் அவதானிகளுக்கு ஏற்பட்டிருக்கின்றது. தென்னிலங்கையில் கட்டவிழும் விடயங்கள் அத்தகைய கருத்து நிலைப்பாட்டை உருவாக்குவனவாக உள்ளன.

சுமார் பத்து ஆண்டுகள் நாட்டை இரும்புக்கரப் பிடிக்குள் வைத்திருந்த மஹிந்த ராஜபக்ஷ தரப்பிடம் இருந்து ஆட்சி அதிகாரத்தைப் பிடுங்குவதற்காக 2014 இறுதியில் எதிர்க்கட்சித் தரப்புகள் எல்லாம் ஒன்றிணைய வேண்டிய தேவை ஏற்பட்டது. அதுவரை காலமும் மஹிந்த தரப்புக்குப் பலமாகவும் அந்த ஆட்சியின் பிரதான முண்டுகளுள் ஒருவராகவும் இருந்த மைத்திரிபால சிறிசேனவைப் பிரித்து எடுத்து, மஹிந்தருக்கு எதிராக நிறுத்துவதன் மூலம் ராஜபக்ஷாக்களின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வரத் தீர்மானிக்கப்பட்டது. அதுவரை எதிர்க்கட்சித் தலைவராகவும் எதிரணிகள் சார்பில் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராகவும் இருந்த ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதித் தேர்தலில் தமது ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் தாம் போட்டியிடாமல் மீண்டும் ஒதுங்கி, ஒரு பொது வேட்பாளரை ஆதரிக்கும் பொது நோக்கத்துக்குப் பெருமனது கொண்டு ஒப்புக்கொண்டார்.

ரணில் விக்கிரமசிங்கவின் அத்தாராளப் போக்கே பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன அப்போது அறிவிக்கப்படக் காரணமாயிற்று. சிறிசேனவின் வெற்றிக்காக அயராது உழைத்தார் ரணில்.

ஜனாதிபதித் தேர்தலில் தாம் வெற்றிபெற்றதும் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அந்தத் தாராளப் போக்கை மைத்திரிபால சிறிசேன புகழ்ந்துரைத்தார். தமக்குப் பதவி ஆசை இல்லை என்றும், அடுத்த தடவை ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடமாட்டார் என்றும்கூட மைத்திரிபால சிறிசேன அறிவித்தார்.

ஆனால், தமது பதவிக் காலத்தில் மூன்றேகாலாண்டுகள்கழிந்த நிலையில் அதிகாரக் கதிரை, ஆட்சிச் செருக்கு அவரைத் தலைகீழாக மாற்றிவிட்டது

தற்போதைய பதவிக்காலத்தின் அந்தத்தை நெருங்க, நெருங்க அடுத்த பதவிக் கால ஆசையும் அவரை நெருக்கத் தொடங்கிவிட்டது.

இன்னொரு தடவையும் ஜனாதிபதி பதவிக் கதிரையில் நீடிக்க விரும்பும் அவர், அதற்காகப் பழைய நிலைப்பாடுகளை மறந்து புதிய போக்கைக் கைப்பிடிக்கத் தொடங்கிவிட்டார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமக்குப் போட்டியாக வரக்கூடியவர் ஐ.தே.கட்சித் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவே என்று கருதும் மைத்திரிபால சிறிசேன, தேர்தல் அறிவிப்புக்கு முன்னரே அத்தேர்தலிலிருந்து ரணிலை வெட்டி அகற்றிவிடக் காய்நகர்த்துகின்றார். பிரதமர் பதவியிலிருந்து ரணிலைத் துரத்தி விட்டால், கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து கட்சி அவரைத் துரத்திவிடும், அவர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் போது கட்சி வேட்பாளராக இருக்கமாட்டார், தமக்குப் போட்டியாக வரமாட்டார் என மைத்திரிபால சிறிசேன கருதுகிறார் போலும்.

ரணில் விக்கிரமசிங்க அல்லாமல் வேறு ஒரு மக்கள் செல்வாக்கு இல்லாத புதுமுகம் ஐ.தே.கட்சி தலைமைக்கு வருமானால், செல்வாக்கு இல்லாத அந்தத் தலைவரை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதை விடுத்துத் தம்மைப் பொது வேட்பாளராக மீண்டும் நிறுத்துவதற்கு ஐ.தே.கட்சி இணங்கக் கூடும். அப்படியில்லாமல், தனது வேட்பாளர் ஒருவரை புதுமுகமாக ஐ.தே.கட்சி நிறுத்துமானால் அவரையும் தோற்கடிப்பது இலகுவாக இருக்கும் என்று கணக்குப் போடுகிறார் மைத்திரி.

இந்த விடயங்களை கூட்டிக் கழித்துப் பார்த்துத்தான் , ஐ.தே. கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்தி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக உள்கட்சிப் புரட்சியைத் தூண்டி காய் நகர்த்தலை ஆரம்பித்திருக்கின்றார் அவர்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளிலிருந்து அவரும் கூட சரியான பாடம் படிக்கவில்லை என்றே தோன்றுகின்றது.

வெறும் பதினைந்து லட்சம் வாக்குகள்தாம் இன்று அவர் பக்கத்தில் உண்டு. அதுவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் என்ற வகையில்தான். அதுவும் பறிபோனால் அவரது எச்ச, சொச்ச வாக்கு வங்கியும் வற்றிக் காய்ந்துவிடும். இந்தச் சீத்துவத்தில்தான் மஹிந்த தரப்பு வேட்பாளரையும், ரணில் போன்ற ஐ.தே.கட்சி வேட்பாளரையும் தாண்டி அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தாம் வெற்றி பெறுகின்றமை குறித்தும் ஜனாதிபதிப் பதவியில் தொடர்கின்றமை பற்றியும் கனவு காண்கின்றார் மைத்திரிபால சிறிசேன.

அந்த இலக்கை அடைவதற்காக பிரதமர் ரணிலை வீட்டுக்கு அனுப்ப முயலும் அவர், அதற்காக ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிளவுக்கும், குழப்பத்துக்கும் வித்திட்டார்.

ஆனால், அது 'பூமராங்' ஆயுதம் மாதிரி திரும்பவும் அவரை நோக்கிய இலக்காகத் திரும்பியிருக்கின்றமைதான் புதிய தென்னிலங்கை அரசியல் நிலைமையாகும்.

பிரதமர் ரணிலுக்கு எதிராகக் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஒட்டி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சுதந்திரக் கட்சியே மூன்று நிலைப் பிளவுக்குள் சிக்குண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஏற்கனவே, அந்தக் கட்சியின் 52 எம்.பிக்கள் மஹிந்த தரப்புடன் கூட்டு எதிரணியில் உள்ளனர். எஞ்சிய 43 எம்.பிக்கள் மட்டும் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் பதவிகளுடன் மைத்திரியுடன் உள்ளனர். அந்த 43 பேரிலேயே ஒரு பகுதியினர் மஹிந்த பக்கம் பாயவும் மற்றொரு பகுதியினர் பிரதமர் ரணிலின் ஐ.தே.கட்சி பக்கம் சேரவும், எஞ்சிய ஒரு பகுதியினர் மட்டும் சு.க. என்ற பெயரில் ஜனாதிபதி மைத்திரிபாலவுடன் நிலைக்கவும் முடிவு செய்திருக்கின்றனர் என்று இப்போது தகவல் வெளியாகியுள்ளது.

ரணிலை வெளியேற்றுவதற்காக ஐ.தே.கட்சியை உடைக்கப் புறப்பட்டவர், இதுவரை தன்னுடன் எஞ்சி நின்ற தனது எம்.பிக்களிலும் கணிசமானோரை இழந்து நிற்க வேண்டிய நிலைமை வந்திருக்கின்றமை வேடிக்கையிலும் வேடிக்கை.

# பிரிகேடியர் பிரியங்க குடும்பத்தவர்களின் விஸாவையும் ரத்து செய்யுமாறு அழுத்தம்




பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவின் குடும்ப உறுப்பினர்களின் விசா அனுமதிப் பத்திரத்தை ரத்துச் செய்யுமாறு புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் பிரித்தானிய அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன.

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவின் குடும்ப உறுப்பினர்களின் விசா அனுமதிப் பத்திரத்தை ரத்துச் செய்யுமாறு பிரித்தானியாவின் உள்துறை அமைச்சிடம் உலகத் தமிழர் பேரவை உள்ளிட்ட சில அமைப்புக்கள் அண்மையில் இக் கோரிக்கையை விடுத்துள்ளன.

கடந்த நான்காம் திகதி லண்டன் தூதரகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழர்களைக் கொலை செய்யப் போவதாக, இராணுவ அதிகாரியான பிரியங்க பெர்னாண்டோ அச்சுறுத்தியிருந்தார்.

இதனையடுத்து புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் தொடர் போராட்டங்களை நடத்தியதுடன், அந்த இராணுவ அதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருந்தனர். இதனையடுத்து இராணுவ அதிகாரி பிரியங்க மீண்டும் இலங்கைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், இராணுவ அதிகாரியின் குடும்பத்தினரின் விஸாவினையும் இரத்து செய்யுமாறு பிரித்தானிய அரசாங்கத்திற்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.


இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தியுள்ளதாகவும், அது தொடர்பில் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர், இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவை நேரடியாக தொடர்பு கொண்டு கருத்துத் தெரிவித்துள்ளார் எனவும் தெரியவருகிறது. (க-100)

# பிரியங்கவின் குடும்பத்தினருக்கு நிதி வழங்க ராணுவம் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 06

பிரித்தானியாவிலுள்ள பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவின் குடும்பத்தினரின் தேவைகளுக்காக நிதி உதவி வழங்க இலங்கை இராணுவம் தீர்மானித்துள்ளது.

இராணுவத்தளபதியின் உத்தரவிற்கமைய இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ இலங்கைக்கு அழைக்கப்பட்ட போதிலும் அவரது குடும்பத்தினர் இன்னமும் பிரித்தானியாவில் வாழ்ந்து வருகின்றனர்.



பிரியங்க நாட்டுக்கு அழைக்கப்பட்டமையினால் தூதரகப் பணிக்காக அவருக்குக்கிடைக்க வேண்டிய சம்பளம் கிடைக்கவில்லை.

தற்போது அவருக்குப் பிரிகேடியர் பதவிக்கான சம்பளம் மாத்திரமே கிடைக்கின்றது. அதற்கமைய முதற்கட்டமாக இராணுவத் தளபதியின் உத்தரவுக்கு அமைய பிரியங்க பெர்னாண்டோவின் குடும்பத்தினருக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் அவருக்குநிதி உதவி வழங்கத்திட்டமிடப்பட்டுள்ளது. ராஜதந்திர ரீதியான சம்பவம் ஒன்றுக்கு முகம் கொடுத்துள்ள இராணுவ அதிகாரியின் குடும் பத்திற்காக இந்த முறையில் இராணுவம் நிதி உதவி வழங்கும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இதுவரை திறக்கப்படாமல் காணப்படும் கடற்றொழில் நீரியல் வள திணைக்களம்



கிளிநொச்சி, மார்ச் 06

கிளிநொச்சி கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களம் மாவட்ட அலுவலகம் அமைக்கப்பட்டு வருடங்கள் சில கடந்தும் இதுவரை திறக்கப்படவில்லை எனக் கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பல கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்த மாவட்ட அலுவலகம் அமைக்கப்பட்டு வருடங்கள் சில கடந்தும் இன்னும் திறக்கப்படவில்லை.

கட்டுமானப்பணிகள் அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்ட நிலையிலும் இதுவரை திறக்கப்பட்டு மக்களுக்கு திருப்தியான சேவையை வழங்குவதற்குரிய நடவடிக்கையை சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் மேற்கொள்ளவில்லை என்றும் பொது மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இனியாவது விரைவாக இந்தத் திணைக்களக் கட்டடத்தை திறந்து வைப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-70)

## நாளை

07.03.2018
புதன்கிழமை
நட்சத்திரம் : விசாகம் பி.இ 1.35 வரை
திதி: ஷஷ்டி பி.இ 5.16 வரை
சுபநேரம் : 4.55 – 6.25 வரை
இராகுகாலம் : 12.25 –1.55வரை

# ஜனாதிபதி உட்பட அரசியல் தலைவர்களுடன் சந்திப்பு: வடக்கிற்கும் வருகிறார் சிறப்புத் தூதுவர் ஹூஸைன்!




இலங்கைக்கு விஜயம் மேற் கொண்டுள்ள ஆளணி எதிர் கண்ணிவெடிகளை தடை செய் வதற்கான சாசனத்தின் விடே தூதுவர் இளவரசர் மிரெட் அல் ஹூஸைன், ஜனாதிபதி மைத்தி ரிபால சிரிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிநாட்டலு வல்கள் அமைச்சர் திலக் மாரப் பன ஆகியோரை சந்திக்கவுள் ளார்.

அத்துடன், புனர்வாழ்வு மற் றும் மீள்குடியேற்ற அமைச்சர் டி. எம். சுவாமிநாதனுடன் இணைந்து வட மாகாணத்திற் கான கள விஜயம் ஒன்றை அவர் மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கை அரசின் அழைப் பின்பேரில், ஆளணிஎதிர்கண்ணி வெடிகளை தடைசெய்வதற்கான சாசனத்தின் விடே தூதுவரான ஜோர்தானைச் சேர்ந்த இளவர சர் மிரெட்ராட் அல்ஹூஸைன் நாளை 7ஆம் திகதிவரை இலங்கையில் ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளார்.

2017 டிசம்பர் 13 ஆம் திகதி ஆளணி எதிர் கண்ணிவெடி களை தடைசெய்வதற்கான சாச னத்தில் 163ஆவது அரசதரப்பாக இலங்கை இணைந்து கொண்ட மையின் விளைவாக இந்த விஜ யமானது தனிப்பட்ட வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது.

பொதுவாக ஒட்டாவா சாசனம் அல்லது கண்ணிவெடிகளை தடை செய்வதற்கான உடன் படிக்கை என்று அறியப்படும் ஆளணி எதிர் கண்ணிவெடிக ளின் பாவனை மற்றும் கையி ருப்பு, உற்பத்தி மற்றும் கைமாற் றல் மீதான தடை மற்றும் அவற் றின் அகற்றல் தொடர்பான சாசன மானது உலகளாவிய ரீதியில் ஆளணி எதிர் கண்ணிவெடி களின் பாவனையை முடிவுறுத் துவதனை எதிர்பார்க்கின்றது.

இது 1997 டிசம்பர் 3 ஆம் திகதி கையொப்பத்தினை இடு வதற்காக திறக்கப்பட்டதுடன், 1999 மார்ச் முதலாம் திகதி நடை முறைப்படுத்தப்பட்டது. தற் பொழுது இந்த சாசனத்தில் 164 அரச தரப்புக்கள் இணைந்து கொண்டுள்ளன.

இலங்கைக்கான விஜயத் தின்போது, விசேட தூதுவர் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன, பிரத மர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் வெளி நாட்டலுவல்கள் அமைச் சர் திலக் மாரப்பன ஆகியோரை சந்திக்கவுள்ளார்.

புனர்வாழ்வு மற்றும் மீள்குடி யேற்ற அமைச்சர் டி.எம். சுவாமி நாதனுடன் இணைந்து வட மாகாணத்திற்கான கள விஜய மொன்றை மேற்கொள்வதற்கும் அவர் மேலும் திட்ட மிட்டுள்ள துடன், இந்த விஜயத்தின்போது அங்கே முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கண்ணிவெடி களை அகற்றுவதற்கான செயற் பாடுகளை முதலாவதாக கண் டறியவுள்ளதுடன், கண்ணிவெடி களை அகற்றும் செயற்பாடுக ளில் ஈடுபடும் முகவர்களையும், கண்ணி வெடிகளால் பாதிக்கப் பட்டவர்களையும் சந்திக்கவுள் ளார்.

விசேட தூதுவரின் விஜயமா னது கண்ணிவெடிகளை அகற்று வதற்கான செயற்பாடுகளில் இலங்கையினால் தற்பொழுது வரை மேற்கொள்ளப்பட்டுள்ள விடயங்களை நிரூபிப்பதற்கான ஒரு சந்தரப்பமாக அமைவது டன், 2020ஆம் ஆண்டில் கண்ணிவெடிகளற்ற நாடாக இலங்கையை மாற்றுவதற்கான திட்டத்தினை முன்னெடுப்பதற் கும் வழிவகுக்கும்.

இந்த அடிப்படையில், ஐக் கியநாடுகளின் இலங்கைக்கான குழுவினர், சிவில் சமூகத்தினர் மற்றும் ஏனைய பங்குதாரர் களுடன் சந்திப்புக்களை மேற் கொண்டு, இலங்கையில் கண்ணி வெடிகளை அகற்றுவதற்காக வும், கண்ணிவெடிகளினால் பாதிக்கப் பட்டவர்களுக் காகவும் மேலும் உதவிகளை வழங்கு வது தொடர்பில் கலந்துரையாடு வதற்கு விசேட தூதுவர் எதிர்பார்த் துள்ளார்.

இன்று 6 ஆம் திகதி மாலை 5.30 மணியளவில், சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய கற்கைகளுக்கான லக்ஷ்மன் கதிர்காமர்நிறுவனத்தில் ஆளணி எதிர் கண்ணிவெடிகளின் மீதான ஒட்டாவா சாசனம்: ஆசியாவின் சந்தர்ப்பங்களும், சவால்களும் எனும்தலைப்பில் விசேட தூதுவர் விரிவுரையொன்றை வழங் கவுள்ளார்.

2004 ஆம் ஆண்டிலிருந்து, இளவரசர் மிரெட் ராட் அல் ஹூஸைன் ஜோர்தானின் கண்ணிவெடிகளை அகற்றுதல் மற்றும் புனர்வாழ்வுக்கான தேசிய குழு வின் தலைவராகச் செயற் பட்டு வருகின்றார்.

ஆளணி எதிர் கண்ணி வெடி களை தடை செய்வதற்கான சாச னத்தின் விசேட தூதுவராக 2009 ஆம் ஆண் டில் நியமிக்கப்பட்ட தன் பின்னர், உலகளாவிய ரீதி யில் ஆளணி எதிர் கண்ணிவெடி களின் தடையை மேம்படுத்து வதற்காக ஐக்கிய நாடுகள் தாப னம் மற்றும் அதன் உறுப்பு நாடுகளுடன் இணைந்து பரந்த அளவில் செயற்பட்டு வருகின் றார்.

நான்கு நாள்கள் உத்தியோக பூர்வ விஜயமாக கொழும்பு வந்த அவர், தற்போது முன்னெடுக்கப் பட்டு வரும் கண்ணிவெடி அகற் றும் நடவடிக்கைகளைப் பார்வை யிடுவதற்காக, இன்று முகமா லைக்கு வரவுள்ளார்.

அத்துடன், வடக்கில் கண் ணி வெடிகளை அகற்றும் அமைப்புக ளின் பிரதிநிதிகளையும், கண்ணி வெடிகளால் பாதிக்கப்பட்டவர்க ளையும் இளவரசர் மிரெட் அல் ஹூசேன் சந்திக்கவுள்ளார்.

கண்ணிவெடிகளைத் தடை செய்யும் பிரகடனத்தில் இலங்கை, 163 ஆவது நாடாக இணைந்து கொண்டுள்ளதை அடுத்து, இள வரசரின் இந்தப் பயணம் இடம் பெறுகிறது.

இளவரசர் மிரெட் அல் ஹூசேன், தற்போது ஐ.நா மனித உரிமை ஆணையாளராக பணி யாற்றும் செய்ட் அல் ஹூசேனின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மொரகஹகந்த, மகாவலி நீர் இனி வடமேல் மாகாணத்திற்கும்



கொழும்பு, மார்ச் 06

மொரகஹகந்த மற்றும் மகாவலி நீரை வடமேல் மாகாணத்திற்கு கொண்டு செல்ல நீர்ப்பாசனத்திணைக் களம் திட்டமிட்டுள்ளது.

இதன் நிர்மாணப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

இந்தத் திட்டத்திற்கு 600 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட் டுள்ளது என திட்டப் பணிப் பாளர் பொறியியலாளர் ஜி. எம்.ஆர்.ஏ.பெரேரா தெரி வித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கு அமைவாக இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுகின் றமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு பங்குச் சந்தை நடவடிக்கை சிறப்பான முறையில் முன்னெடுப்பு

கொழும்பு, மார்ச் 06

கொழும்பு பங்குச் சந்தை யின் பரிவர்த்தனை நடவடிக்கை கள் இந்த ஆண்டில் சிறந்த முறையில் செயற்படுகிறது.

அதுதொடர்பாக கொழும்பு பங்குச் சந்தையின் தலைமை நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஜீவ பண்டாரநாயக்க தெரிவிக்கை யில் –

பங்குச் சந்தைக்கான வெளி நாட்டு உள்வாங்கல் 1500 கோடி ரூபாவிற்கும் அதிகமாக பதிவாகி யுள்ளது.

இந்த வருடத்தில் 53 நாள்கள் நிறைவடைந்துள்ள நிலையில், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்கள் மூலம் 11ஆயிரத்து 200 கோடி ரூபா முதலீடு செய்யப் பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடப் படுமிடத்து, இந்தத் தொகை அதி கம் எனவும் தலைமை நிறை வேற்று பணிப்பாளர் குறிப்பிட்டார்.

# கல்வியியற் கல்லூரி நேர்முகப்பரீட்சைக்கான கடிதங்கள் கிடைக்காதவர்களுக்கு அறிவிப்பு



கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர் களை சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாக வுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் 2017ஆம் ஆண்டின் கல்வி நடவடிக்கைகளுக்காகவே மாணவர்கள் கல்வி யியற்கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்படவுள்ளனர்.

வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக மாவட்ட அடிப்படையில் இம்முறை மூன்று மடங்கு மாணவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளனர்.

நாடு முழுவதிலுமுள்ள 19 கல்வியியற் கல்லூரிகளுக்கு 27 கற்கை நெறிகளுக்காக 4 ஆயிரத்து 745 பேர் சேர்த்துக் கொள்ளப்பட வுள்ளனர் என கல்வியியற் கல்லூரி தலைமை ஆணையாளர் கே.எம்.எச். பண்டார தெரிவித்தார்.

நேர்முகப்பரீட்சைகள் கல்விப் பீடங்களின் மாவட்ட மட்டத் தில் நடைபெறவுள்ளன.

இந்தமாதம் முடிவடைய முன்னர் கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள் ளப்படவுள்ளனர் என்றும் ஆணையாளர் தெரி வித்தார்.

நேர்முகப்பரீட்சைக்காக இதுவரையில் கடிதங்கள் கிடைக்கப்பெறாதோர் 0112784818 மற்றும் 0112 784816 என்ற தொலைபேசி இலங்கங்களுடன் தொடர்பு கொண்டு அது தொடர்பான விவரங்களை கேட்டறிந்து கொள்ள முடியும்.

இவர்களின் தகுதிக்கு அமை வாக தேசிய கல்வியியற் கல்லூரியில் நேர்முகப்பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ளன.



தவக்கால சிந்தனை

# மனிதனுக்கு நம்பிக்கை முக்கியம்

யானைக்கு தும்பிக்கை எவ்வளவு முக்கியமே மனதனுக்கு நம்பிக்கை அவ்வளவு முக்கியம் . நான் என்னை நம்ப வேண்டும், ஏனையவரை நம்ப வேண்டும். இவ்வாறு நம்பிக்கையின் அடிப்படையில் மலர்வதுதான் நல்வாழ்வு. இல்லறம் நல்லறமாய் திகழ்வதற்கு நம்பிக்கை தேவைப்படுகின்றது. பரஸ்பர நம்பிக்கை பதகழிப்பைப் படிப்படியாக நீக்கி மனப்பக்குவத்தை பலப்படுத்துகின்றது.

தன்னில், தன்னகத்தேயுள்ள சக்திகளில், தனது ஆற்றல்களில் சதா சஞ்சலம் கொள்பவன் தன்னையே நம்பமாட்டான். தனது இயலாமைகளையே பெரிதுபடுத்துபவன் பிறரில் அவநம்பிக்கை கொண்டவனாய் தன்னையும் நொந்துகொள்வான். இவ்வாறு அவன் உற்சாகமிழந்து விரக்தி நிலையில் வீழ்ந்து கிடப்பான்.

இறைவன் ஆபிரகாமிற்குக் கூறினார்:" பையன்மேல் கை வைக்காதே அவனுக்கு எதுவும் செய்யாதே உன் ஒரே மகனையும் எனக்குப் பலியிடத் தயங்கவில்லை என்பதிலிருந்து நீ கடவுளுக்கு அஞ்சுபவன் என நான் அறிந்து கொண்டேன்"(தொ.நூ.22:12) ஆபிரகாம் நம்பிக்கைக்கு பெயர்பெற்ற குலமுதுவராக இறைவ னால் ஆசீர்வதிக்கப்பட்டார்.

அருட்கலாநிதி வின்சன் பற்றிக் அ.ம.தி

### அட்டப்பள்ள விவகாரம்:

# தமிழ்மக்களுக்கு ஓர் எச்சரிக்கை

## ரெலோ உபமுதல்வர் ஹென்றி மகேந்திரன்

(காரைதீவு நிருபர் சகா)
அம்பாறை,மார்ச் 06

அட்டப்பள்ள விவகாரம் சாதாரணமாகப் பார்க்கக்கூடிய விடயமல்ல.இதுஒட்டுமொத்த தமிழ்மக்களுக்கு அடிக்கப் பட்ட சாவுமணி. ஓர் எச்சரிக்கை. இதனை நாம் சும்மா விடப் போவதில்லை என ரெலோ கட்சியின் உபமுதல்வரும் கல்முனை மாநகரசபையின் முன்னாள் எதிர்க்கட்சித்தலைவரும் இம்முறை கல்முனை மாநகரசபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதிநிதியுமான ஹென்றிமகேந்திரன் தெரிவித்துள்ளார்.



அட்டப்பள்ள தமிழ்மக்கள் 23பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையை அறிந்து ஹென்றி மகேந்திரனும் அவருடன் கல்முனை மாநகரசபை யின் முன்னாள் எதிர்க்கட்சித்தலைவரும் தமிழரசுக்கட்சி யின் 60வருட கால மூத்த உறுப்பினருமான கு.ஏகாம்பரம் கல்முனை மாநகரசபைக் குத் தெரிவான பிரதிநிதி சந் திரசேகரம் ராஜன் ஆகியோர் சென்றிருந்தனர்.

முன்னதாக அவர்கள் மயானத்திற்குச் சென்று அங்கு கட்டப்பட்டிருந்த கல்லறைகள் உள்ளிட்ட பல விடயங்களைப் பார்வையிட்டனர்.

பின்னர் மக்களைச்சந்தித்தனர். விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மக்களின் உறவினர்களைச் சந்தித்து ஆறுதல் கூறினர்.

அதன் பின்னர் அவர் தெரிவித்தவை வருமாறு:-

இது இனரீதியான பிரச்சினை அல்ல. பேராசை கொண்ட ஒரு தனிநபரின் பிரச்சினை. அவருக்கெதிராக அட்டப்பள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்தே ஜனநாயக ரீதியாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

ஆனால், அவர் இதனை இன ரீதியாக சித்திரித்து செல்வாக்கால் சட்டத்தையும் வளைத்துப்போட்டிருக்கிறார். பாவம் அப்பாவி மக்கள்.

இதுவிடயம் தொடர்பாக நாம் எமது தமிழ்த்தலைமைகளிடம் உரியவிவரங்களுடன் முறையிடுவோம்.

மேலும் விரைந்து செயற்படுவதற்காக சட்டஉதவியை நாடவுள்ளோம். திங்கள் முன்னநகர்வு (மோசன்) போட்டு பிணையில் எடுக்க சட்டத்தை நாடுவோம் என்று தெரிவித்துள்ளார்.

# விமானப்படையினரின் மாபெரும் கண்காட்சி





அம்பாறை,மார்ச் 06

இலங்கை விமானப்படையினரின் 67 ஆவது ஆண்டு நிறைவை நினைவு கூரும் முகமாக அம்பாறை விமான படைத்தள மைதானத்தில் மாபெரும் கண்காட்சி இடம் பெற்றது.

பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் கண்காட்சியை பார்வையிட வந்திருந்தனர். விமானப்படையினரின் விமானங்களும் .உலங்கு வானூர்திகளும்,கனரக ஆயுதங்களும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

அத்தோடு வான் வெளியில் விமான சாகசங்களும் பரசூட்டில் தரை இறங்கும் நிகழ்ச்சியும் நடத்தப்பட்டன.

மேலும் பொலன்னறுவையில் இருந்து அம்பாறை வரையிலான மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டியும் நடத்தப்பட்டது.சைக்கிள் ஓட்ட வீரர்களை மட்டக்களப்பு விமானப்படை தள வீரர்கள் கல்லடி பாலத்துக்கு அருகில் வரவேற்று வழியனுப்பி வைத்தனர்.

# மட்டு.எஸ்.எஸ்.பியாக மென்டிஸ் நியமனம்

மட்டக்களப்பு,மார்ச் 06

மட்டக்களப்பு மாவட்டத்தின் 75 ஆவது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ்.மென்டிஸ் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

பொலிஸ்மா அதிபரினால் நாடளாவிய ரீதியில் வழங்கப்பட்டுள்ள இடமாற்றத்திற்கு அமைய கம்பளையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றிய எம்.எஸ்.மென்டிஸ் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றிய சமன்யட்வர கொழும்பு தெற்கு பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தின் முன்பாக அணிவகுப்பு மரியாதை நடைபெற்றதுடன், மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ். மென்டிஸ் மதத் தலைவர்களின் ஆசியுடன் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.




# மகிழ்ச்சியில் வேலையற்ற பட்டதாரிகள்

மட்டக்களப்பு,மார்ச்06

வேலையற்ற பட்டதாரிகளின் வரலாற்றில் மகஜர் ஒன்று ஜனாதிபதி ஒருவரிடம் கையளிக்கப்பட்டு அதற்கான பதில் உடனடியாக வழங்கியமைக்காக மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

மட்டக்களப்புக்கு வருகை தந்துள்ள ஜனாதிபதியிடம் வேலையற்ற பட்டதாரிகளால் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. அந்த மகஜரைப் பெற்றுக் கொண்ட ஜனாதிபதி கூட்டத்தின் போது மகஜரில் குறிப்பிட்ட விடயங்களுக்கு தீர்வை அறிவித்துள்ளார். இது தொடர்பில் காந்தி பூங்காவில் கூடிய பட்டதாரிகள் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மகிழ்ச்சி தெரிவித்துள்ள மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் ஒட்டுமொத்த பட்டதாரிகளுக்கும் ஜனாதிபதி நல்ல முடிவை அறிவித்துள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளனர். இதேவேளைஇது பட்டதாரிகளின் போராட்டத்திற்கு கிடைத்தவெற்றி என்றும் மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் எஸ்.சிவகாந்தன் கூறியுள்ளார்.

# காணாமற்போனோர் அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்டவர்கள் புலம்பெயர் அமைப்புகளின் கட்டளையை நிறைவேற்றுவோரே

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 06

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, காணாமற்போனோர் அலுவலகத்திற்கு சுயாதீனமாக செயற்படக்கூடிய உறுப்பினர்களை நியமிக்கத்தவறி விட்டார்.

புலம்பெயர்தமிழர் அமைப்புகளுக்கு ஆதரவு அளித்து அவர்களது கட்டளைகளை நிறைவேற்று பவர்களே காணாமற்போனோர் அலுவலகத்திற்கு ஆணையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த கால அரசுக்கு பாதகமாகவும், நல்லாட்சி அரசுக்கும் புலம்பெயர்தமிழர்களுக்கும் சாதகமாகவும் தமது விசாரணைகளை மேற்கொள்வார்கள் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் பேராசிரியர் குணதாசஅமரசேகர எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அமெரிக்காமற்றும்ஐரோப்பா போன்ற மேற்குலக நாடுகளின் விருப்பங்களை ஜனாதிபதி காணாமற் போனோர் அலுவலக விவகாரத்தில் நிறைவேற்றியுள்ளார். யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள் மாத்திரம் அல்லர். சிங்கள மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் மேற்குலக நாடுகள் யுத்த விவகாரத்தில் தமிழ் மக்களுக்கு சாதகமாகவே இன்று வரை இலங்கைக்கு அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றன.

இறுதிக்கட்ட யுத்தத்தில் தமிழ் மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டதுடன் பலர் காணாமற் போயுள்ளனர் என்ற விடயம் ஏற்றுக் கொள்ளகூடியதாகவே காணப்படுகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். அதற்காக நாட்டை ஒரு பொழுதும் காட்டிக்கொடுக்கவும்



விட்டுக்கொடுக்கவும் முடியாது.

மேற்குலக நாடுகளின் விருப்பங்களுக்கு அமையவே தேசிய அரசாங்கம் நாட்டின் நிர்வாகத்தினை மேற்கொண்டு வருகின்றது. ஐ. நா. மனித உரிமையின் ஆணையாளரின் இலங்கைக்கு எதிரான அதிருப்தியின் பின்னரே காணாமல் போனோர் அலுவலகத்திற்கான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் இந்த அலுவலகத்தின் செயற்பாடுகள் மந்தகரமாகவே காணப்பட்டன. தற்போது நியமிக்கப்பட்டுள்ளவர்கள் ஒரு போதும் சுயாதீனமாகச் செயற்படமாட்டார்கள்.

இவர்கள் புலம்பெயர் தமிழர்களின் விருப்பங்களுக்கு அமையவே தமது விசாரணைகளை மேற்கொள்வார்கள். அலுவலகத் தின் வரையறுக்கப்பட்ட காலப் பகுதிக்குள் விசாரணைகள் முழுமைபெற வேண்டும் என்ற கட்டாயம் காணப்படுவதன் காரணமாக இவர்கள் பொய்யான விசாரணைகளையும், சாட்சியங் களையும் உருவாக்க முடியும்.

இறுதி விசாரணை அறிக்கையினை இவர்கள் மேற்குலகத்தவரின் விருப்பங்களுக்கு அமையவே உருவாக்கி சர்வதேச மட்டத்தில் இலங்கையினை காட்டிக் கொடுத்து நாட்டை சர்வதேச நீதிமன்றம் வரை கொண்டுசெல்வார்கள் என்பதை நல்லாட்சியின் தலைவர் மறந்துவிடக் கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மிலன் - 2018 கடற்படைப் பயிற்சி இன்று ஆரம்பமாகி 13 வரையில்!



கொழும்பு, மார்ச் 06

மிலன் - 2018 கடற்படை பயிற்சிகள் இன்று ஆரம்பமாகின்றன.

'கடல் முழுவதும் நட்பு' எனும் தொனிப் பொருளில் இடம்பெறும் இவ் வருடத்திற்கான பயிற்சியில் கலந்துகொள்வதற்காக இலங்கை கடற்படையின் சமுத்ரா மற்றும் சுரனிமல எனும் இரு கப்பல்கள் இந்தியாவிற்கு சென்றுள்ளன.

இவ்விரு கப்பல்களும் நாட்டை விட்டு கடந்த வெள்ளிக்கிழமை புறப்பட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

மிலன் என அறியப்படும் இக்கடற்படை பயிற்சி இந்தியக் கடற்படையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த கடற்படைகளுக்கிடையிலான பயிற்சிகள் அந்தமான் தீவின் பிளையர் துறைமுகத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கையின் கிழக்குப் பகுதியான திருகோணமலைத் துறைமுகத்திலிருந்து அந்தமான் தீவின் பிளையர் துறைமுகத்தை நோக்கி இரு கப்பல்களும் பயணத்தை மேற்கொண்டுள்ளன.

இந்த பயிற்சியில் கலந்து கொள்வதற்காக ஆறு கடற்படை பயிலுநர் அதிகாரிகள் மற்றும் 27 கடற்படை அதிகாரிகள் உட்பட 284 கடற்படை வீரர்கள் கப்பல்களுடன் பயணித்துள்ளார்கள்.

# குசல தம்ம தேரரின் உடலுக்கு பேராயர் இறுதி அஞ்சலி

கொழும்பு, மார்ச் 06

பௌத்த தொலைக்காட்சியின் ஸ்தாபகரும் கொழும்பு 7 இல் உள்ள சம்போதி விஹாராதிபதியுமான காலஞ்சென்ற சங்கைக்குரிய சரணாகம குசல தம்ம தேரரின் பூதவுடலுக்கு கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இறுதி அஞ்சலி செலுத்தினார்.

சம்போதி விகாரையில் வைக்கப்பட்டுள்ள தேரரின் பூதவுடலுக்கு பேராயர் நேற்று முன்தினம் இறுதி



அஞ்சலி செலுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)

# உலக சுகாதார அமைப்பு இலங்கைக்குப் பாராட்டு

நாட்டின் தாய் மற்றும் சிசு மரண வீதத்தை கட்டுப்படுத்தல் மற்றும் நேரடி குழந்தை பிறப்புகளின் எண்ணிக்கை என்பவற்றில் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு சமமான மட்டத்தை இலங்கை அடைந்துள்ளது.

இதனை உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டியுள்ளது. நாட்டின் சிசு மரண வீதம் குறைந்திருப்பதானது அமெரிக்கா போன்ற நாடுகளின் தரவுகளுக்குச் சமமான மட்டத்தை இலங்கை அடைந்துள்ளது.

இலங்கையில் தாய் மற்றும் சிசு மரணவீதத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை யும் உலக சுகாதார அமைப்பு வரவேற்றுள்ளது.

உலக மட்டத்தில் கர்ப்ப காலத்தின் போதும் பிரசவத்தின் போதும் வருடாந்தம் உயிரிழக்கும் பெண்களின் தொகை சுமார் 3 லட்சமாகும். இவற்றில் பெரும்பாலான மரணங்கள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலேயே பதிவாகின்றன.

எனினும், இந்த தாய் மரண வீதத்தைக் கட்டுப்படுத்தும் இலக்கை இலங்கை தற்போது வெற்றி கொண்டிருப்பதாக உலக சுகாதார அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

# தொழுகைக்கு செல்வதை கட்டுப்படுத்தும் சுற்றுநிருபத்தை உடன் ரத்து செய்யவும்!

## இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

முஸ்லிம் அரச ஊழியர்கள் வெள்ளிக்கிழமைகளில் ஜும் ஆத் தொழுகைக்கு செல்வது தொடர்பில் பொது நிர்வாக அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றுநிருபம் உடனடியாக இரத்து செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் செயலாளர் ஏ.எல்.எம்.முக்தார் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையின் ஒவ்வொரு பிரஜையினதும் மத சுதந்திரம் என்பது அரசமைப்பில் அடிப்படை உரிமைகளில் ஒன்றாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இது அரசமைப்பின் 14 ஆம் அத்தியாயம் 1 (2) பிரிவிலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நிறுவனத் தலைவர்களின் தீர்மானத்திற்கமைவாக நிறுவன செயற்பாடுகளுக்கு தடை ஏற்படாத வகையில் முஸ்லிம் அரச ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்றுவதற்காக இரண்டு மணி நேர விசேட விடுமுறை வழங்கப்படலாம் என பொது நிர்வாக அமைச்சின் 21/2016 ஆம் இலக்க சுற்றுநிருபம் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த சுற்று நிருபம் தாபனக் கோவையின் Xii ஆம் அத்தியாயம் 12:1 இற்கு திருத்தமாக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்தை அண்மையில் அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

இந்நடவடிக்கையானது முற்றுமுழுதாக இலங்கை அரசமைப்பின் அடிப்படை உரிமையை மீறும் செயல் என்பதுடன் அரசமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மத சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

எனவே, முஸ்லிம் அரச ஊழியர்களின் அடிப்படை உரிமையை மீறும் வகையில் வெளியிடப்பட்டுள்ள இந்த சுற்றுநிருபத்தை உடனடியாக வாபஸ் பெற்று, முஸ்லிம் ஊழியர்களுக்கு பாதிப்பில்லாத வகையில் புதிய சுற்றுநிருபம் ஒன்றை வெளியிடுமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.

இல்லையேல் நீதிமன்றம் சென்று அதனை சவாலுக்குட்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் எனவும் அறியத்தருகின்றோம் என்று அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# விஸா இன்றி தங்கியிருந்த இந்திய பிரஜை கைதானார்!

கொழும்பு, மார்ச் 06

விஸா இன்றி நாட்டில் இருந்த இந்திய பிரஜை ஒருவர் புஸல்லாவ பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரான 35 வயதுடைய இந்திய நபரை கம்பளை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை புஸல்லாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 'செயற்பட்டு மகிழ்வோம்' விளையாட்டுப் போட்டி

அச்சுவேலி, மார்ச் 06

ஆவரங்கால் நடராஜ இராம லிங்க வித்தியாலயத்தின் 'செயற் பட்டு மகிழ்வோம்' விளையாட்டுப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தி யாலய மைதானத்தில் அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந் திரராஜா பிரதம விருந்தினராகவும் யாழ். வலய ஆரம்பக் கல்வி உத விக் கல்விப் பணிப்பாளர் ப.சசி குமார் சிறப்பு விருந்தினராகவும், யாழ். வலய ஆரம்பக் கல்வி விளை யாட்டு அபிவிருத்தி செயற்றிட்ட இணைப்பாளர் ச.சிவகாந்தி கௌ ரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். விளையாட்டு வீரர்களுக்கான பரிசில்களை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி தெய்வேந்திர ராஜா வழங்குவார். (இ

# காலி கோட்டை, காலி முகத்திடலை உள்ளடக்கிய சுற்றுலா வலயம்

கொழும்பு, மார்ச் 06

காலி கோட்டை மற்றும் காலி முகத்திடல் என்ப வற்றை மையப்படுத்திய சுற்றுலா வலயம் அமைக் கப்படவுள்ளது.

துறைமுக மற்றும் கப்பல் துறை அமைச்சு இதற்கான நடவடிக்கையை மேற் கொண்டுள்ளது.

சுற்றுலாத்துறையில் கவர்ச்சியை ஏற்படுத்தியுள்ள ரெவல் கப்பல்கள், காலி துறைமுகத்திற்கு வரும் நிலையில், அவற்றை சுற் றுலாத்துறை மேம்பாட்டிற் காக பயன்படுத்த திட்ட மிட்டுள்ளது என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.



வருடாந்தம் சுமார் 200 இற்கும் அதிகமான சுற்று லாக் கப்பல்கள் கொழும்பை அண்மித்த கடற்பகுதியின் ஊடாக பயணிக்கின்றன என, அமைச்சு சுட்டிக்காட்டி யுள்ளது.

# தினசரி ராசி பலன் (06.03.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மாசித்திங்கள் 22 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை பஞ்சமித்திதி இரவு 12.57 மணி வரை பின்னர் ஷஷ்டி. நட்சத்திரம். சுவாதி இரவு 9.04 மணி வரை பின்னர் விசாகம். சித்தயோகம் இரவு 9.04 மணி வரை பின்னர் அசுபயோகம்.*

**ராகுகாலம்** - *மாலை 3.20 மணி முதல் 4.50 மணி வரை*

**சுபநேரம்** - *பகல் 10.49 மணி முதல் 12.19 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி-** *மாசி மாத தேய்பிறை பஞ்சமி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *சுவாதி.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** மத்திமபலன்கள் காணப்படுகின்றன. பொருள்வரவு சுமாராக இருக்கும். செலவுகள் அதிகரிக்கும். தேகசுகம், குடும்பசுகம் பாதிக்கப்படும். வைத்தியச் செலவு ஏற்படும்.

**ரிஷபம்** இன்பமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு முன்பிருந்த சரிவு நிலைமாறி பொருள்கள் விற் பனையாகும்.

**மிதுனம்** ஆக்கபூர்வமான நாள். வருமானம் வளமாக இருக் கும். குடும்ப உறவில் நல்லிணக்கம் காணப்படும். சுயதொழிலில் ஆதாயம் பெருகும். வியாபாரத்தில் முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும்.

**கடகம்** கவலையான நாள். பணவருவாய் குறையும். எண் ணிய கருமங்கள் நிறைவேறுவது கடினம். குடும்பத் தில் சச்சரவு உண்டாகும். வியாபாரம் மந்தநிலையிலேயே நடக்கும். கடன்களை மீளப்பெறுவது கடினம்.

**சிம்மம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும். எடுக்கும் முயற்சிகள் தடை, தாமதமாகும். உடல்நிலை சுமா ராக இருக்கும்.

**கன்னி** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். வேலை தேடுவோருக்கு நல்ல நிறுவனத்தில் வேலை அமை யும். வீடு கட்டும் பணி முழுமை அடையும். வாகன வசதி பெருகும்.

**துலாம்** சுபீட்சமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். சொத்து வாங்குவது, விற்பது சுலபமாக முடியும். உறவினரிடமிருந்து பிரச்சினை தீரும். சகோதர உறவு பலப்படும்.

**விருச்சிகம்** சலனம் மிகுந்த நாள். பணவரவு குறையும். உற வினர்கள், உடன்பிறந்தவர்களால் அலைச்சலும், செலவும் அதிகரிக்கும். உத்தியோகத்தில் வேலைச் சுமையுடன் வீண் பழி கேட்க நேரிடும்.

**தனுசு** ஆக்கபூர்வமான நாள். வருமானம் உயரும். குடும் பத்தில் அமைதி ஓங்கும். வியாபாரத்தில் திட்டமிட்ட படி லாபம் கிடைக்கும். வேற்றுமதத்தினர் உதவுவார் கள்.

**மகரம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். குடும்பத்தில் வீண் மனஸ்தாபங் கள் உண்டாகும். உடல்நிலை பாதிக்கப்படலாம். வியாபாரத்தில் மற்றவர்களை நம்ப வேண்டாம்.

**கும்பம்** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப உறுப்பினர்களின் அனுசரணை அதிகரிக்கும். நீண்டநாளாக வராமலிருந்த பணம் கைக்கு வரும்.

**மீனம்** துயரமான நாள். பொருளாதாரம் நலிவடையும். வீண் அலைச்சல், உடல்நிலைக் கோளாறு ஏற்பட லாம். உறவினருக்கு மனத்தாங்கல்கள் வரலாம். வீண் செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

**சந்திராட்டம நாள்: பூரட்டாதி 4ஆம் பாதம் உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# மொனறாகலை புத்தளவில் 48 ஆவது மாதிரிக்கிராமம்



மொனறாகலை புத்தளவில் நிர்மாணிக் கப்பட்டுள்ள 48 ஆவது மாதிரிக்கிராமம் வீட மைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தலைமையில் நாளை மறு தினம் வியாழக்கிழமை பொதுமக்களிடம் கை யளிக்கப்படவுள்ளது.

அடிப்படை வசதிகள் மற்றும் உள்ளக வீதி களைக் கொண்டதாக இந்தக் கிராமம் அமைக் கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் நாடு முழுவதும் அமைக்கப்பட்டுவரும் மாதிரிக்கிராமங் களின் எண்ணிக்கை 500 ஆகும்.

மேலும் 50 கிராமங்கள் எதிர்வரும் சில வாரங்களில் பொதுமக்களிடம் கையளிக்கப்பட இருக்கின்றன என வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் சாகர பலன்சூரிய தெரிவித்தார்.

# நயினையில் இன்று ஏகஷண்டி ஹோமம்

யாழ்ப்பாணம்,மார்ச்06

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத் தில் ஏகஷண்டி ஹோமம் இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது.

இந்த ஷண்டி ஹோமத்தில் கலந்து கொண்டு எல்லோரது நன்மைக்காகவும் பிரார்த்தித்து அம்பிகையின் தெய்வீகத்திருவருளை அனைத்து மக்களும் பெற்றின்புறும் வண்ணம் ஆலய அறங்காவலர்சபையின் அழைப்புவிடுத்துள்ளார்.

# மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்ட மைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை புதன் காலை 08.00 மணி யிலிருந்து மாலை 05.00 மணி வரை

**யாழ் பிரதேசத்தில் -** மருதங்கேணி, வத்திராயன், உடுத் துறை, கொடுக்குளாய், ஆழியவளை, வெற்றி லைக்கேணி, கட்டைக் காடு கோவில், வெற்றி லைக்கேணி, இராணு வமுகாம், கட்டைக்காடு இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** சாளம்பைக்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறி யியலாளர் அறிவித்துள்ளார். (இ

# இலட்சார்ச்சனை

நீர்வேலி, மார்ச் 06

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவிலில் விசேட இலட்சார்ச்சனை மற்றும் விநாயகபுராண வசன படனம் படிப்பு என்பன நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 21 நாள்கள் நடைபெறவுள்ளன.

விநாயக புராண வசனப் படிப்பு காலை, மாலை வேளைகளில் இடம்பெறும். இலட்சார்ச்சனை தினமும் மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். எதிர் வரும் 25 ஆம் திகதி இலட்சார்ச்சனை வழிபாடு விநாயக புராண வசன படன படிப்பு என்பன நிறைவுபெறும். அன்றைய தினம் விசேட பூசைகள், அபிஷேகங்கள் இடம்பெற்று நண்பகல் அன்னதான நிகழ்வும் நடைபெறும். (இ

# ஆலய உற்சவம்

நல்லூர், மார்ச் 06

நல்லூர், நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகவுள்ளது.

மஹோற்சவம் 10 தினங்கள் நடை பெறவுள்ளது. எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ

# 'கே.கே.எஸ். காணிகளின் உரிமையாளர்கள் பதிவு செய்யுங்கள்

காங்கேசன்துறை பகுதியிலுள்ள ஜே/233 கே.கே.எஸ் மேற்கு, ஜே/234 கே.கே.எஸ் மத்தி, ஜே/235 கே.கே.எஸ் தெற்கு ஜே/236 வீமன் காமம் வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் தற்போது காங்கேசன்துறை பொலிஸாரின் பாவனையில் உள்ள வீடு மற்றும் காணி உரிமையாளர்கள் தமது தேசிய அடையாள அட்டை, காணி உறுதி தத்துவ உரிமைப்பத்திரம் ஆகிய ஆவணங் களுடன் பிரதேச செயலகத்திற்கு வருகை தந்து தமது விவரங்களை எதிர் வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளு மாறு வலி. வடக்கு பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ அறிவித்துள்ளார். (இ

# இன்று தொடக்கம் காலநிலை மாற்றம்

இன்று முதல் மழையுடன் கூடிய கால நிலை தற்காலிகமாக குறையும் என எதிர் பார்ப்பதாக வளி மண்டவியல் திணைக் களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ, தென், ஊவா மாகாணங்க ளிலும் களுத்துறை, கண்டி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலும் ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்யும்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் காலை வேளையில் மழை பெய்யலாம். நாட்டின் சில பகுதிகளில் பனிமூட்டமான காலநிலை நிலவும் எனத் திணைக்களம் விடுத்துள்ள வானிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# நரகமாக மாறியுள்ள சிரியா...!

பதற வைக்கின்றன சிரியாவிலிருந்து வரும் தகவல்கள். கடந்த 11 நாள்களில் மட்டும் 602 பேர் இறந்துள்ளனர். அவர்களில் 185 பேர் குழந்தைகள், 109 பேர் பெண்கள். தலைநகர் டமாஸ்கஸுக்குக் கிழக்கில் உள்ள கிழக்கு கூட்டா நகரில் பதுங்கியிருக்கும் ஐஎஸ் பயங்கரவாதிகள் மீது சிரிய ராணுவம், ரஷ்ய விமானப் படைகளின் உதவியுடன் கடும் தாக்குதல் நடத்தி வருகிறது. ஆனால், இந்தத் தாக்குதலில் ஐஎஸ் பயங்கரவாதிகளை விடவும் அப்பாவிப் பொதுமக்கள்தான் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உலகைப் பதறவைத்திருக்கும் சிரியா மரணங்களுக்குக் காரணம் என்ன?

**எழுச்சியும் அடக்குமுறையும்**

கடந்த ஏழு ஆண்டுகளாகத் தொடரும் உள்நாட்டுப் போர்தான் இதற்கு முக்கிய காரணம். 2011 இல் பல்வேறு அரபு நாடுகளில் ஆட்சியாளர்களின் சர்வாதிகாரப் போக்கு, வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு, அடக்குமுறை ஆகியவற்றுக்கு எதிராக மக்கள் ஆங்காங்கே திரண்டு தாங்களாகவே போராட்டத்தில் ஈடுபட்டனர். அதை 'அரபு வசந்தம்' என்றனர்.

இதனால் துனீசியா, எகிப்து, லிபியா, யேமனில் ஆட்சியாளர்கள் பதவி இழந்தனர். பஹ்ரைன், சிரியாவில் மக்கள் எழுச்சி வலுவாக இருந்தது. அல்ஜீரியா, ஈராக், ஜோர்டான், குவைத், மொராக்கோ, ஓமானில் பெரிய போராட்டங்கள் நடந்தன. லெபனான், மௌரிடானியா, சூடான், சவுதி அரேபியா, மேற்கு சகாரா நாடுகளில் மக்கள் போராட்டம் வலுவில்லாமல் வெறும் அடையாளமாக நிகழ்ந்தது.

சிரியாவைப் பொறுத்தவரை இந்தப் போராட்டங்களை அடக்குமுறையுடன் எதிர்கொண்டது அதிபர் பஷர் அல் அஸ்ஸாத் தலைமையிலான அரசு. ராணுவத்தின் மூலம் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அது பின்னர் அலையலையாகப் பரவி பெரிய போராட்டமாக மாறியது. இதற்கிடையே அதிபரை எதிர்க்கும் எதிர்க்கட்சிகளின் ஆதரவுப் படை ஒருபுறம், ஐஎஸ் பயங்கரவாதிகள் ஒருபுறம், அமெரிக்க ஆதரவிலான குர்துகள் ஒருபுறம் என்று எல்லாத் தரப்பிலிருந்தும் கடும் தாக்குதல்கள் நடக்கின்றன. அதிபரை எதிர்ப்பவர்கள் இடையே ஒற்றுமை இல்லை என்பதுடன் நோக்கங்களும் வெவ்வேறானவையாக இருக்கின்றமையால் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வராமலே இழுத்துக் கொண்டிருக்கிறது. மக்களிடையே செல்வாக்கை இழந்துவிட்ட அதிபர் ராணுவத்தின் விசுவாசத்தாலும் ரஷ்யா, ஈரான் போன்ற நாடுகளின் உதவியாலும் பதவியில் தொடர்வதால் போர் ஓய்வதாக இல்லை. அனைத்துத் தரப்பு மக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற அதிபர் தவறியதால் அந் நாடு சின்னாபின்னமாகிக் கொண் டிருக்கிறது. போரிடும் குழுக்களை ஆதரிக்கும் நாடுகளும் எண்ணெய் வளத்தைக் குறிவைத்தும், சிரியா வில் அமைதி வந்துவிடக்கூடாது என்று திட்டமிட்டும் காய்களை நகர்த்துகின்றன. இவற்றுக்கு நடுவில் ஏதுமறியா அப்பாவிகள் பலியாவதுதான் கொடுமை.



**சிக்கல்களின் பின்னணி**

மேற்காசியாவில் முக்கியமான நாடு சிரியா. சிரிய அரபுக்கள், கிரேக்கர்கள், ஆர்மீனியர்கள், அசிரியர்கள், குர்துகள், சர்காசியன்கள், மண்டியாக்கள் சேர்ந்து வாழ்கின்றனர். மதங்களும் பலதரப்பட்டவை. சன்னிகள், ஷியாக்கள், சலாஃபியர்கள், இஸ்மாயீல்கள், அலாவைட்டுகள், ட்ரூஸ்கள், மண்டியாக்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள், யாஜிதிக்கள் என்று பலர்.

இந்நாட்டுக்கு மேற்கில் லெபனான், மத்தியத் தரைக்கடல், வடக்கில் துருக்கி, கிழக்கில் ஈராக், தெற்கில் ஜோர்டான், தென்மேற்கில் இஸ்ரேல் உள்ளன. 1967 இல் நடந்த மத்திய கிழக்குப் போரில் சிரியாவின் கோலான் குன்றுப் பகுதிகளில் மூன்றில் இரண்டு மடங்கைக் கைப்பற்றிய இஸ்ரேல், 1981 இல் தனது நாட்டு எல்லையுடன் அதைச் சேர்த்துக் கொண்டுவிட்டது. வளமான சமவெளி, உயர்ந்த மலைகள், எண்ணெய் வளம் மிக்க பாலைவனம் கொண்டது சிரியா. யூப்ரடிஸ் நதி பாயும் பள்ளத்தாக்கு செழிப்பானது. எண்ணெய் ஏற்றுமதி, சுற்றுலா, விவசாயம் ஆகியவை நாட்டுக்கு வளம் சேர்த்தன.



நாட்டின் வருமானத்தில் 40 வீதம் எண்ணெய் ஏற்றுமதி மூலம் கிடைத்தது. வேளாண்மை மூலம் ஜிடிபியில் 20 வீதம் கிடைத்தது. சுற்றுலாத் துறை 20 வீதம் வருவாயைப் பெற்றுத் தந்தது. இப்போது உள்நாட்டுப் போர் காரணமாக பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஈரான், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளிடம் பெருந்தொகையைக் கடன் வாங்கிச் சமாளிக்கிறது சிரிய அரசு. எண்ணெய் ஏற்றுமதி மட்டும் மூன்றில் இரண்டு மடங்கு வீழ்ச்சியடைந்தது. அதனால் வேலைவாய்ப்பும் குறைந்துவிட்டது.

உள்நாட்டுப் போரால் நாட்டு மக்களில் 30 வீதமானோர் வறியவர்களாகிவிட்டனர். 11.4வீதமானோர் பேர் வறுமைக் கோட்டுக்கும் கீழே வாழ்கின்றனர். குழந்தைகள் விளை யாட்டு, படிப்பு என்று ஏதுமில்லாமல் அன்றாடம் போர்ச் சூழலிலேயே காலத்தைக் கழிக்கின்றனர். ஏழெட்டு வயது குழந்தைகள்கூட துப்பாக்கிகளுடன் பெரியவர்களுக்குத் துணையாகக் களத்தில் நிற்கின்றனர்.

இதற்கிடையே நாட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்றிய ஐ.எஸ்., சிரியாவின் எண்ணெய் வயல்களிலும் பெரும் பகுதியைக் கைப்பற்றி, எண்ணெயை விற்று தனது எதேச்சாதிகார அரசை வலுப்படுத்திக்கொண்டிருந்தது. ஆயுதங்களுக்குப் பெரும் பகுதியைச் செலவிட்டது. 2013 இல் மட்டும் உள்நாட்டுப் போரில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் இறந்துவிட்டனர். அவர்களில் 11,000 பேர் குழந்தைகள். இரண்டாவது உலகப் போர்கூட இத்தனை ஆண்டுகள் நடந்ததில்லை. சிரி யாவின் நரக நாள்கள் அத்தனை நீண்டவை!

**ஐ.நா. தீர்மானம்**

போரை ஒரு மாதத்துக்கு நிறுத்துங்கள் என்று ஐ.நா. சபை கடந்த பெப்ரவரி 24 இல் தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால் சிரிய அரசு இந்தப் போர் நிறுத் தத்தை பகலில் அதுவும் சில மணி நேரங்களுக்கு மட்டும்தான் கடைப்பிடிப்போம் என்கிறது.

அரசை எதிர்க்கும் படைகளிடம் ஆபத்தான ஆயுதங்கள் இருக்கின்றமையால் போர் நிறுத்தத்தை முழுமையாகக் கடைப்பிடிக்க முடியாது என்கிறது. அரசை எதிர்ப்போர் ஆயுதங்களுடன் சரண் அடைந்தால்தான் இது சாத்தியம் என்கிறது. அத்துடன் முற்றுகைக்குள்ளான பகுதியில் உள்ள மக்களுக்கான உணவுப் பொருள்கள், உயிர் காக்கும் மருந்துகள் போன்றவை 40 லொறிகளில் டமாஸ்கஸில் தயாராக இருக்கின்றன. அரசுப் படைகள் அனுமதி தராததால் அவை காத்துக்கிடக்கின்றன.

சிரியாவே நாசமானாலும் பரவாயில்லை, எதிரிக்கு அடங்கிவிடக் கூடாது என்பதே எல்லோருடைய முடிவாகவும் இருக்கிறது. சிரிய அரசுக்கு இப்போது ரஷ்யா பக்கபலமாக இருக்கிறது. அரசை எதிர்க்கும் எதிர்க்கட்சிகளின் படைகளுக்கு அமெரிக்கா துணையாக இருக்கிறது. 30,000 பேரைக் கொண்ட எல்லைப் பாதுகாப்புப் படையை உருவாக்க எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன. இது சிரிய அரசுக்கு மிகப் பெரிய கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. சிரிய அரசுப் படைகள், சிரிய ஜனநாயக ஆதரவுப் படைகள், சிரிய எதிர்க்கட்சிகளின் ஆதரவுப் படைகள், ஐஎஸ் படைகள், தாஹிர் அல் ஷாம் என்ற படை என்று களத்தில் ஐந்து வெவ்வேறு அணிகள் இருக்கின்றன.



ஐ.நா. சபை மட்டும் முயற்சி எடுத்தால் போதாது, அரபு நாடுகளும் இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பும் தீவிர முயற்சி மேற்கொண்டால்தான் இந்த அர்த்தமற்ற போர் ஓய்ந்து இருப்பவர்களாவது நிம்மதியாக வாழ முடியும். போர் ஓய்ந்தாலும் சிரியாவைச் சீரமைத்து பழைய நிலைக்குக் கொண்டுவர குறைந்தது இருபது முதல் ஐம்பது ஆண்டுகள் தேவைப்படும். வெகு விரைவில் உள்நாட்டுப் போர் ஓய்ந்து சிரியாவில் அமைதி நிலவ வேண்டும். அதுதான் மனிதம் மிச்சமிருக்கும் மனங்களில் ஒலித்துக் கொண்டிருக்கும் பிரார்த்தனை! (இ)

வ.ரங்காசாரி









கவிஞர் இரா.ஜெயக்குமார் எழுதிய 'அநுபவங்களும் அநுமானங்களும்' வெளியீட்டு விழா உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. முதற்பிரதியை யாழ். பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் சி.சிவலிங்கராசாவிடம் இருந்து நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அ.ஜெயக்குமாரன் பெற்றுக் கொண்டார். நிகழ்வில் சில பதிவுகள் இங்கே... (இ











கரைச்சி பிரதேச கலாசார பேரவையின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மலையாளபுரத்தைச் சேர்ந்த ஏழுமலைப்பிள்ளையின் சதுரங்க வேட்டை நாடக நூல் வெளியீடு அண்மையில் கரைச்சி பிரதேச மாநாட்டு மண்டபத்தில் கரைச்சி பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் இடம்பெற்றது நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சி. சத்தியசீலன் கலந்துகொண்டு முதற் பிரதியை வெளியிட்டு வைக்க இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தின் தலைவரும், தொழிலதிபருமான ந.சிவகுமார் சார்பில் கலந்து கொண்ட பிரதிநிதி பெற்றுக் கொண்டார்.

எழுத்தாளரும் நடிகருமான ஏழுமலைப்பிள்ளை தென்னிந்திய சினிமாவின் பிரபல நடிகர்களான ரஜனிகாந், கமல் ஆகியோருடன் இணைந்து திரைப்படங்களிலும் நடித்துள்ளார். அத்தோடு இதுவரை இருபதுக்கு மேற்பட்ட விருதுகளையும் பெற்றுள்ளார்.

அந்த நிகழ்வில் சில காட்சிகள்... (இ







நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அளவக்கை கிராமத்தில் 'நண்பனின் தேவை நற்பனி மன்றத்தின்' ஏற்பாட்டில் கடந்த 3 மாதங்கள் இடம்பெற்ற இலவச கணினி பயிற்சியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை அளவக்கை ஆலயத்தில் இடம்பெற்றது.

நண்பனின் தேவை நற்பணி மன்றத்தின் நிர்வாக அலுவலகர் கே.பவமொழி பவன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் அளவக்கை பங்குத்தந்தை சுரேந்திரன் றெவல்,வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்தியர் ஜீ.குணசீலன், சமூக சேவையாளர் என்.கணேசலிங்கம் (சொக்கன்) கணினி ஆசிரியர் தயாபரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது 3 மாத கால கணினி பயிற்சியை முழுமையாக பூர்த்தி செய்த 16 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் கிராம மக்கள்,சமூக ஆர்வலர்கள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது. நிகழ்வில் சில பதிவுகள். (இ–112)






'ஒருவன்' ஈழத் திரைப்படத்தின் இசை வெளியீடும், அறிமுக நிகழ்வும் அண்மையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இத் திரைப்படத்தில் பங்கு பற்றிய அனைத்து கலைஞர்களும் கலந்து கொண்டனர். இதனை TUBE தமிழ் நிறுவனத்தினர் தயாரித்து வழங்கியுள்ளார்கள்... (இ–19)

காலைக்கதிர்
Kalaikkathir



தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



# கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 115

## நுண்மான் நுழைபுலத் தரிசனம்

ஒரு கேள்வியைக் கேட்டால், அதற்குப் பதில் காட்டி, பின் அப்பதிலையே கேள்வியாக்கி, அதன் பதில் காட்டி, மீண்டும் அதனை கேள்வியாக்கி.... இப்படியே உள்நுழைந்து செல்லும் அவர் அறிவு கண்டு, நான் கொண்ட திகைப்பை, வார்த்தைகளுள் அடக்க முடியாது. பொருள் பற்றிய சிந்தனையே இன்றி, அறிவே வாழ்வாக, அறிவே தேவையாக, அறிவே உணவாக, அறிவே சுவாசமாக வாழும், மனிதருள் மனிதரல்லாத மனிதர் அவர்.

* * *

''திரு வேறு தெள்ளியராதல் வேறு'' எனும் குறளடிக்கு, தன் வாழ்வால் விளக்கம் தந்தார். உலகத்தில் ஒட்டாத வாழ்வு. இஃது எங்ஙனம் சாத்தியம்? கேள்வி பிறக்கும். தமிழ் தந்த தெளிவு, கூடவே பதிலும் பிறக்கும். இப்படி ஒரு சிலரேனும் வாழப்பழகினால் தான், அறிவுலகம் நிலைக்கும். இன்றைய பொருளுலகிற்கு, ஐயா ஓர் அருங்காட்சிப் பொருள். தமிழைப் போலவே ஐயாவையும், விளங்க விளங்க விளங்காமையின் விரிவே விளங்குகின்றது. கல்வி உலகில் கால் வைக்க விரும்பும் இளைஞர்க்கு அவர் வாழ்வே ஒரு செய்தி, விதியால் வந்த அறிவு. அறிவால் வந்த அடக்கம். அடக்கத்தால் வாய்த்த குரு. குருமேல் கொண்ட பக்தி, இறை நம்பிக்கை,இவை, விரிந்த இவர் அறிவின் வேர்கள்.

* * *

ஐயா, ஐயா என, தன் குருவான கணேசையர் மீது அவர் காட்டும் பக்தி அளப்பரியது. ''ஐயாவின் அறிவோடு ஒப்பிடும்போது, எங்கள் அறிவு ஒரு துரும்பு'' என, அவர் சொல்லும்போது, நான் என் அறிவு நிலை எண்ணி நாணுவேன். என்னுடைய, அறிவின்மை கண்டபின்னும், ''என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி, வண்ணப் பணித்து என்னை வா என்ற வான் கருணை'', எண்ணி வியப்பேன். பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டுக் கிடக்கையிலும், கொழும்பில் இருந்து நான் தொலைபேசியில் கேட்ட கேள்விக்கு, பதில் கூறிப் பத்துக் கடிதங்கள், அவரிடமிருந்து அடுத்தடுத்து வருகின்றன. இவரது கடவுள் நம்பிக்கை புதுமையானது. அன்றாடம் ''மானதபூஜை.'' ''பண்டிதர் கோவில்களுக்கு அதிகம் போவதில்லை'' மற்றவர்களின் இத்தகு கூற்றுக்குச் சிரிப்பே பதிலாகும். சாதாரண தோட்டக்காரனோடும், அவன் நிலையில் நின்று, அவர் பேசுவது கண்டு வியப்பேன். அப்பேச்சிலும் உண்மை இருக்கும். ''நான்'' எனும் தருக்கு அவர் வார்த்தைகளில் என்றும் இராது. வினயம் சம்பந்தமான வித்தை. இவரிடமிருந்து என்னால் பெறமுடியாமல் போனதில் இதுவும் ஒன்று.

* * *


மொத்தத்தில், என் அறிவு கடந்து நிற்கும் அற்புதர் இவர். இப்பொழுது என் வேண்டுதல் எல்லாம், ''அடுத்த பிறவியிலாவது, இவரிடம் இருக்கும் அறிவு முழுவதையும், அறியும் அறிவோடு என்னைப் படைத்து விடு'' என்பதே. எண்ணங்கள் தொடர்கின்றன. விரிவஞ்சி விடுகிறேன். முடிவுரையாய், இவரைச் சந்தித்ததால், இவர் மேல் கொண்ட பக்தியை விட, தமிழ் இலக்கியங்கள் மேலும், தமிழ் புலவர்கள் மேலும், தமிழின் மேலும், உண்டான பக்தி அதிகமாயிற்று. அவர் இட்ட அறிவுப் பிச்சையால், அறிவுலகில், இன்று நானும் ஒரு செல்வன் போல்.

## நல்லதோர் வீணை செய்து

(மறைந்த நாடக நடிகர் அருமைநாயகம் பற்றிச் சில எண்ண அலைகள்)

* * *

நீண்ட நாள்களாகவே நம் சமூகத் தராசு பழுதுபட்டுக் கிடக்கிறது. நல்லார் நிறையைக் குறைத்தும்,



# உன்னைச் சரணடைந்தேன்

அல்லார் நிறையைக் கூட்டியும் காட்டும் அத்தவற்றினால், நம் சமூகத்தில், ஆற்றலுள்ள பலர் அடையாளம் தெரியாது போயினர். புல்லர் பலர் புகழ் கொண்டனர். நல்லோர் தம் 'நிறை' பற்றி அக்கறை காட்டாது விட, புல்லர்கள் தம் பொய்மை நிறையைப் போற்றி பொலிந்தனர். சமன் செய்து சீர்தூக்கும் தரம் பற்றிய கவலை, நம் சமூகத்தில் எவர்க்கும் இல்லாது போனதால், இன்று சப்பிகளுக்கு நெல்லின் மதிப்பு. நெற்களோ சாக்கடையில். 'தற்புகழே தரத்தின் அடையாளம்.' 'பொய்மையே புகழின் வித்து.' 'சந்தர்ப்பவாதமே மீள் சிந்தனையாம்' 'கற்றதனாலாயபயன் காசு தேடலே.' 'அழுக்கைத் தேடலே இலக்கியமாகும்.' ' யார் தோளாயினும் கால் வைத்துஏறு.' 'ஏறியபின்னேஏணியை எட்டி உதைத்தலே கூரிய அறிவு' 'கொள்கைகள் இருப்பது குற்றமென்றுணர்க.' 'சொந்த சிந்தனை நிந்தனைக்குரியது.' 'வழிமொழிந்திடலே வல்லமைக்கு அறிகுறி.' 'வரிசை வேண்டா வாழ்வே இனிது.' இங்ஙனமாய், புன்மொழிகள் பொன்மொழிகளாக, அறிவு அநாதையாயிற்று. கூவி விற்றால் குப்பையும் விலை போகும் நிலையில், இன்று நம் அறிவுலகம். ஆற்றலாளர்கள் அசடராய்க் கருதப்பட, அசடர்கள் ஆற்றலாளர்களாய் பிரகடனப்படுத்தப் பட்டனர். சான்றாண்மை சமூகத்தில் வேண்டாமை ஆயிற்று. இவ் அவல நிலையால், உண்மையாய் வாழ்ந்த பலபேர், பொய்யர்களுடன் போராட முடியாமல் வீழ்ந்து போயினர். உண்மையால் வீழ்ந்து போன அவ் உத்தமர்களை, 'பைத்தியக்காரர்கள்' எனப் பரிகாசம் செய்தது நம் படிப்புலகம். அங்ஙனம், பைத்தியக்காரப்பட்டம் பெற்று, அவலமாய் இறந்து போன, அருமைநாயகம் எனும் ஆற்றலாளர் பற்றியதே இக்கட்டுரை.

* * *

கற்கும் திறன் மானிடர்க்கே உரியது. அத்திறன், கல்வி, அறிவு, ஞானம் என உயர்வு நோக்கி வரிசைப் படும். வரிசை பேணா நிலைக்கு நம் சமூகம் தள்ளப்பட, இன்று நம் சமூகத்தில் கல்விக்கே அதிக மதிப்பு. அறிவு, ஞானம் பற்றி யாரும் அதிக அக்கறை கொள்வதில்லை. கல்வியின் விரிவே அறிவின் விரிவாய்க் கருதப்படுவதால், அறிவும், ஞானமும் இன்று அவசியமற்றுப் போயின. அறிவாகாத பட்சத்தில் கல்வியாற் பயனில்லை. ஞானமாகாத பட்சத்தில் அறிவாற் பயனில்லை. கல்வியையும் அறிவையும் கடந்து ஞானநிலை எய்தியோர், பொய்யான உலகியலைக் கடந்து சிந்திக்கத் தலைப்படுவர். உயர்ந்த அவர் சிந்தனையோடு ஒட்டமுடியாத உலகம், அவர்தமைப் பித்தர் எனப் பேசிப் பரிகசிக்கும். ஞானக்கிறுக்கு எய்திய அந்த ஞானியரோ, உண்மையில் உறுதி கொண்டு உலகியலை இகழ்ந்து நிற்பர். குப்பை சுமந்து வந்த குள்ளச் சாமியை, 'இப்பித்தர் செயல் எதற்காம்?' எனப் பாரதி வினவ, 'புறத்திலே நான் சுமக்கிறேன், அகத்தில் நீ சுமக்கிறாய்' என, கூறிச் சிரித்தானாம் அக்குறுமுனி. ஞானக் கிறுக்கை நாம் அறிந்து கொள்ள, இச் சம்பவம் அருமையான ஓர் உதாரணமாகிறது. இவ்வுயர்நிலை ஞானக் கிறுக்கு, நம் சமூகத்தில் இன்று இல்லையெனும் படியாய் நலிந்து போயிற்று. இருந்த ஒரு சிலரையும், உண்மைப் பைத்தியங்களாக்கி ஒதுக்கி விட்டோம். அங்ஙனம் ஒதுக்கப்பட்ட ஒருவர்தான் அருமை நாயகம்.

* * *

சொந்த ஊர் நவாலி. பிறந்த திகதி தெரியாது. கற்றது மானிப்பாய் இந்துக் கல்லூரியில். சமயம் கிறிஸ்தவம். ஜாதியில் 'கரையான்.' பிடித்த துறை நாடகம். இறந்த திகதியும் ஞாபகத்தில் இல்லை. இது, அருமைநாயகம் பற்றி எனக்குத் தெரிந்த விவரக்கோவை. மானிப்பாய் இந்துக்கல்லூரி தந்த ஊக்கத்தால், நாடகத்துறையில் ஈர்க்கப்பட்டார். அவ் ஈர்ப்பு, முதலில், நாடகத்தை அவர் வாழ்வாக்கிற்று. பிறகு, அவர் வாழ்வை நாடகமாக்கிற்று. நாடகமே எண்ணம், நாடகமே பேச்சு, நாடகமே வாழ்வு என, நாடகத்துள் மூழ்கிப் போனார். மனம், வாக்கு, காயம் என அத்தனையும் நாடகமயமாக, உலகை மறந்தார். வாழ்வை மறந்தார். முடிவில், தன்னையும் மறந்தார். தனித்தார். இறந்தார்.

* * *

இவ்வளவே அமரரான அருமைநாயகத்தின் வாழ்க்கைச் சுருக்கம். நாடகப் பைத்தியம் சினிமாப் பைத்தியமாக மாற, தமிழ்நாடு சென்று, மக்கள் திலகம் எம்.ஜி.ராமச்சந்திரனின் 'ஸ்டூடியோ' வில் இணைந்தார். இன்று புகழோடு இருக்கும் பாலுமகேந்திரா, அக்காலத்தில் இவரோடு பயின்றவர். தாய்நாட்டின் தரம் உயர்த்த வேண்டும் எனும் வேண்டாத விருப்பால், இலங்கையில் தமிழ்ப்படம் எடுக்க வென, விரிந்த தமிழ்நாட்டுச் சினிமா உலக வாய்ப்பைத் துறந்த அருமை நாயகம், தாய்நாடு வந்து, தமிழ்ப் படம் எடுத்து, எல்லோராலும் ஏமாற்றப் பட்டு, இருமையும் இழந்தார். கூர்ந்து பார்த்தால், பழைய தமிழகத் தமிழ்ப் படங்கள் சிலவற்றில், 'உதவி எடிற்றர்' எனும் தலைப்பின் கீழ், அருமை நாயகம் எனும் இவர் பெயர் இன்றும் மங்கலாய்த் தெரியும்.

* * *

இவரது நாடக முயற்சி பற்றிச் சொல்வதல்ல என் நோக்கம். நாடகத்துள் மூழ்கி, ஞானக்கிறுக்கனாகித் திரிந்த இவர், ஏதோ வகையில் என்னோடு தொடர்புபட்டார். அவரது ஞானக்கிறுக்கை வெளிப்படுத்திய சில சம்பவங்களை, இக்கட்டுரையில் வெளிப்படுத்த முனைகிறேன். இவரை நான் சந்தித்தபோது, மேற் சொன்ன சம்பவங்கள் யாவும் நடந்து முடிந்திருந்தன. அறிந்தவர்களும், அவரைக் கண்டு ஒதுங்கிய காலமது. பித்தன் போல் திரிந்த அவர், முதற் சந்திப்பிலேயே என் மனங்கவந்தார். அச் சந்திப்பு சுவாரஸ்யமானது.

* * *

(தொடரும்...)

## இளைஞர் உயிரிழந்தமையால் பதற்ற நிலைமை:

# முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு வழங்குங்கள்!

## அமைச்சர் ஹலீம் வேண்டுகோள்

கொழும்பு, மார்ச் 06

முஸ்லிம் வாலிபர்களின் தாக்குதலுக்கு உள்ளாகி பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதனால், அவரது உடல் தகனம் செய்யும் வரையிலும் தற்போது முஸ்லிம் பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைக் கருத்திற் கொண்டு திகன, கெங்கல்ல, உன்னஸ்கிரிய பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கும்படி கண்டி பிரதிப் பொலிஸ் மாஅதிபர் மஹிந்த ஏக்கநாயக்கவிடம் முஸ்லிம் சமயம் கலாசாரம் மற்றும் தபால் துறை அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வாகனம் ஒன்றைப் பின்னோக்கி எடுக்கும்போது பட்டு சைட் கண்ணாடி உடைந்த சம்பவத்தின் போது ஏற்பட்ட கைகலப்பினால் தாக்கு தலுக்குள்ளாகி இளைஞர் உயிரிழந் துள்ளார்.

இந்தச் சம்பவத் தைத் தொடர்ந்து தெல்தெனிய, மெதமஹநுவர, திகன, உடிஸ்பத்துவ, கெங்கல்ல, உன்னஸ் கிரிய ஆகிய பிரதேசங்களில் நிலவி வரும் பதற்ற சூழ்நிலையைக் கவனத் திற்கொண்டு கண்டி பிரதிப் பொலிஸ் மாஅதிபர் மஹிந்த ஏக்கநாயக்க விடம் முஸ்லிம் பிரதேசங்களில் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வேண்டிக் கொள்கிறேன்.

இந்தச் சம்பவத்தைப் பயன்படுத்தி இனங்களுக்கிடையே ஒற்றுமையை சீர்குலைக்கும் முயற்சிகளில் சிலர் ஈடுபட்டுள்ளனர்.




சமாதானத்துடன் முடிவடைந்த பிரச்சினையை மேலும் இனவாத ரீதியாகவும் அரசியலாகவும் முன்னெடுக்க சிலதீய சக்திகள் முற்பட்டு வருகின்றனர். இன மதம் பாராமல் சட்ட ஒழுங்கை நிலை நாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதனை அடுத்து பெரும் அசம்பாவிதங்கள் எவையும் நடைபெறாமல் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எனினும், சில அசம்பாவிதங்கள் நடைபெற்ற போதிலும் பதற்றத்தை உருவாக்க முனைந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 11 சந்தேக நபர்களுடன் இரு வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அம்பால என்ற இடத்தில் இருந்து திகன நகர் வரையிலும் பூதவுடலை ஊர்வலமாக எடுத்துச் செல்வதற்கு திட்ட மிடப்பட்டுள்ளதாகவும் நகருக்கு கொண்டு வருவதற்கு அனுமதி வழங்கப்போதில்லை என்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உறுதியளித்துள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தில் முஸ்லிம்கள் பொறுமையுடனும் புத்தி சாதுரியமாகவும் நடந்துகொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பெண் பிரதிநிதிகளின் பெயர் குறிப்பிடப்படாவிடின் வர்த்தமானியில் வெற்றிடமாகவே அறிவிக்கப்படும்



### மேலதிக தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

வெற்றிபெற்ற சகல கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களும் நாளை 7 ஆம் திகதிக்கு முன்னர் பெண் பிரதிநிதிகளின் பெயர் அடங்கிய தமது பெயர்ப் பட்டியலை தேர்தல் ஆணைக் குழுவிடம் ஒப்படைக்க வேண்டும்.

பெண் பிரதிநிதிகளின் பெயர் குறிப்பிடப்படாத பட்சத்தில் குறித்த கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் பெயர்ப் பட்டியலின்படி வர்த்தமானி அறிவித்தலில் பெண் வேட்பாளர்களுக்கான பதவி வெற்றிடமாகவே அறிவிக்கப் படும் என மேலதிக தேர்தல் ஆணையாளர் எம்.எம் மொஹமட் குறிப்பிட்டார்.

பெண் பிரதிநிதிகளை தெரிவுசெய்வதில் கட்சிகளின் கவனமற்ற செயற்பாடு குறித்து தெளிவுபடுத்தும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சி மன்றங்களுக்கான பெண் பிரதிநிதிகளின் பெயர் குறிப்பிடுவதில் கட்சிகள் தனது பொறுப்பற்ற தன்மையை வெளிப்படுத்தி வருகின்றன. சட்ட உறுப்புரைகளில் சகல கட்சிகளிலும் 25 சதவீத பெண் பிரதிநிதிதுவம் கட்டாயப்படுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேபோன்று சுயேச்சை குழுக்களும் இந்த 25 சதவீத பிரதிநிதித்துவத்துக்கு முக்கிய இடத்தை கொடுக்க வேண்டும்.

பெண்பிரதிநிதிகளின் எண்ணிக்கை தொடர்பிலும் அவசியம் தொடர்பிலும் சகல கட்சிகள் அல்லது சுயேச்சை குழுக்களை வலியுறுத்த வேண்டிய பொறுப்பு தேர்தல் ஆணைக் குழுவுக்கு உள்ளது.


அவ்வாறு தேர்தல் ஆணைக் குழு கோரும் பெண்பிரதிநிதிகளின்எண்ணிக்கைக்குஇணங்க சகல கட்சிகளும் தனது முழு ஒத்துழைப்பையும்வழங்க வேண்டும். கட்சிகள் அனைத்தும் சட்டம் தொடர்பில் சிந்தித்து செயற்படவேண்டும்.

பெருமளவிலான கட்சிகள் தனது கட்சிக்கான உறுப்பினர் பெயர்ப்பட்டியலில் பெண் வேட்பாளர்களுக்கான எண்ணிக்கைக்கு பெண் உறுப்பினரைத் தெரிவு செய்வதற்கு பதிலாக ஆண் உறுப்பினரின் பெயரை பட்டியலில் இணைக்கூடிய வாய்ப்புக்களும் எழுந்துள்ளன.

அவ்வாறு பெண் பிரதிநிதிகளின் பெயருக்கு பதிலாக ஆண் உறுப்பினர் ஒருவரின் பெயர் இணைக்கப்பட்டால் அவ் உறுப்பினர்கள் உள்ளூர் மன்றங்களில் சேவையாற்ற தகுதியற்றவர்களாகவே கருதப் படுவர்.

மேலும், பெண் பிரதிநிதிகளுக்கு பதிலாக ஆண் பிரதிநிதிகளின் பெயர்ப்பட்டியலில் உள் வாங்கப்பட்டிருந்தால் தேர்தல் ஆணைக்குழு வெளியிடவுள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறித்த பெண் பிரதி நிதிகளுக்கான பதவிகள் வெற்றிடமாகவே அறிக்கையிடப்படும். வர்த்தமானி அறிவித்தலை மீறி உள்ளூர் சபைகளில் குறித்த ஆண் பிரதிநிதிகள் பதவி வகிக்க முடியாது என்றும் அவர் தெவித்துள்ளார்.

## இரு இலங்கை குடும்பங்கள் உட்பட அகதிகள் குழு அமெரிக்கா பயணம்!




கொழும்பு, மார்ச் 06

அமெரிக்காவில் குடியமருவதற்காக நவுரு தீவு அகதிகள் முகாமிலிருந்து ஐந்தாவது அகதிகள் குழு அமெரிக்கா சென்றுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் ஆஸ்திரேலியாவுடனான என்றஅகதிகள்மீள்குடியேற்ற திட்ட உடன்படிக்கைக்கு அமைய இந்தக் குழு அந்த நாட்டுக்குச் சென்றுள்ளது எனசர்வதேச ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் ரோஹிங்கியா முதலான நாடுகளின் நான்கு குடும்பங்களைச் சேர்ந்த எட்டு சிறுவர்கள் அடங்கலாக 29 அகதிகள், நவுரு தீவிலிருந்து நேற்றுமுன்தினம் வெளியேறியுள்ளனர்.

அவர்களுள் மூன்று குழந்தைகள் அடங்கலாக இரண்டு இலங்கை குடும்பங்களும் அடங்குகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலிய பிரதமர் மெல்கம் டேன்புல்லுக்கும், அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், கடலோர தடுப்பு முகாம்களிலிருந்து 1,250 அகதிகளை குடியேற்ற இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது.

இந்தக் குடியேற்றத் திட்டம் கடந்த 15 மாதங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில், நவுரு தீவிலிருந்து 139 அகதிகளும், பப்புவா நியூகினியா மானஸ் தீவிலிருந்து 85 அகதிகளும், கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் மீள்குடியேற்றத் திற்காக வெளியேறியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அமெரிக்க அதிகாரிகள் குழு, நவுரு தீவில் தங்கிருப்பார்கள் என்றும், எனினும் அடுத்தக்கட்ட குழுவை மீள்குடியமர்த்துவதற்கான நேர்காணலை மேற்கொள்வதற்கான திட்டத்தை அவர்கள் இன்னும் திட்டமிடவில்லை என்றும் அகதிகள் செயற்பாட்டு கூட்டணியின் பேச்சாளர் இயன் ரின்டோலை மேற்கோள்காட்டி தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒலுவில் துறைமுக பணிகளை முன்னெடுத்துச் செல்ல அமைச்சுக்களின் குழுவொன்றை நியமிக்கத் தீர்மானம்



கொழும்பு, மார்ச் 06

ஒலுவில் துறைமுகத்தின் பணிகளை முறையாக முன்னெடுத்துச் செல்வதற்கு அமைச்சுக்களின் குழுவொன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.


இதற்கான அமைச்சரவையின் அனுமதி அடுத்த வாரம் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் ஒலுவில்துறைமுகத்தைநேரில்சென்றுபார்வையிட்டமையின் பின்னர், இடம்பெற்ற பேச்சின் போது இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

வர்த்தக மட்டத்தில் இலாபமீட்டும் துறைமுகமாக ஒலுவில் துறைமுகத்தை முன்னெடுத்துச் செல்வது குறித்து பிரதமர் விசேட கவனம் செலுத்தியுள்ளார்.

அங்கு மேற்கொள்ள வேண்டிய புதுப்பித்தல் நடவடிக்கைகள் குறித்தும், துறைமுகத்தை அண்டிய பகுதியில் சுற்றுலாத்துறையை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புக்கள் குறித்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கு விடயங்களை ஆராய்ந்தார்.

13.




- ✧ வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலை ஒன்றில் ஒவ்வொரு வருடமும் சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கையை மேலுள்ள வரைபடம் காட்டுகின்றது.
- ✧ அப்பாடசாலையில் இவ்வருடம் சித்தியடைவார்கள் என எதிர்பார்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

.......................................................

14. ஒரேமாதிரியான 04 கம்பத்துண்டங்களைப் பொருத்துவதற்கு ரூபா 51.00 செலவாகின்றது எனின் அவ்வாறான இரண்டு கம்பத்துண்டங்களைப் பொருத்துவதற்குத் தேவையான பணம் எவ்வளவு?

..........................................................................................................................................................................

15. ஒரு வேலையைச் செய்து முடிக்க 2 வாரங்களும் 2 நாட்களும் எடுத்தன. இன்னொரு வேலையைச் செய்து முடிக்க 1 வாரமும் 2 நாட்களும் எடுத்தன எனின் இரண்டு வேலைகளையும் செய்து முடித்த காலத்தை நாட்களில் எழுதுக.

.......................................................................................................................................... (2 x 15 = 30 புள்ளி)

**16 தொடக்கம் 45 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிந்தெடுத்து அதன்கீழ்க் கோடிடுக.**

16. இவ் வருட ஒலிம்பிக் போட்டி நடத்தத் திட்டமிட்டுள்ள நாடு.
    1. அமெரிக்கா   2. பிறேசில்   3. யப்பான்   4. இந்தியா

17. நீரில் வாழ்க்கையை ஆரம்பிக்கும் பிராணிகளின் கூட்டம்.
    1. தவளை, தேரை, நுளம்பு   2. முதலை, தவளை, பாம்பு
    3. நுளம்பு, ஆமை, உடும்பு   4. ஆமை, முதலை, தவளை

18. இரவு வேளைகளில் ஒலி எழுப்பும் பிராணி
    1. ஆமை   2. கிளி   3. ஆந்தை   4. வாத்து

19. நவலங்கா சமயப் பாடசாலையை ஆரம்பித்தவர்
    1. ரீ.பி.ஜாயா   2. வண.எஸ்.மஹிந்த   3. ஜயதிலக்க   4. C.W.W.கன்னங்கரா

20. 
    அருகேயுள்ள சூரிய நமஸ்காரம் எத்தனையாவது படிநிலையாகும்?
    1. 3ம் படிநிலை   2. 6ம் படிநிலை   3. 9ம் படிநிலை   4. 5ம் படிநிலை






# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் **18**

பகுதி – II   நேரம்– 1 மணித்தியாலம் 15 நிமிடம்

வினாத்தாள் 18 பகுதி II இன் தொடர்ச்சி...

**08. கீழே தரப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

i. ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன் : ..........................................................

ii. முனிவர்கள் வாழும் இடம் : .......................................................................... (2 x 1 = 2 புள்ளி)

**09. பின்வரும் வாக்கியத்தை பன்மை வடிவிற்கு மாற்றி எழுதுக.**

i. வயலில் முள் இருந்தது. ..........................................................................................................


(1 x 1 = 1 புள்ளி)

**10.1. பின்வரும் பாடல் வரிகளைப் பூர்த்தி செய்க.**

i. குருவிக் கூடு சிறியது
குஞ்சு வாழச் சிறந்தது
உருவிற் சிறிய கூடுதான்
..................................................

ii. இடர்வரும் போதும் - உள்ளம்
இரங்கிடும் போதும்
....................................... - மாந்தர்
உறவு கொள்வர் அப்பா (2 x 2 = 4 புள்ளி)

**11. அ) பின்வரும் உருக்களின் பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

I.  ..............................

ii.  ..............................

(2 x 1 = 2 புள்ளி)

II. பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

உன்னால் எனக்கு உதவ முடியுமா? ..................................................................................

(1 x 2 = 2 புள்ளி)

**12. அ) பின்வரும் தமிழ்ச் சொற்களுக்கான சிங்களச் சொற்களை அவற்றின் உச்சரிப்பில் தமிழில் எழுதுக.**

i. சோறு :- ..........................................................

ii. பதினைந்து :- .......................................................... (2 x 1 = 2 புள்ளி)

**ஆ) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுத்துக்களில் எழுதுக.**

1. பஸ் எக்க ஆவா. .......................................................... (1 x 2 = 2 புள்ளி)

**13. பின்வரும் படத்தினை அவதானித்து ஐந்து சொற்களுக்குக் குறையாத எழுவாய் பயனிலைத் தொடர்புகள் சரியாக அமையக் கூடியவாறு மூன்று வாக்கியங்கள் எழுதுக.**



1. ..........................................................

2. ..........................................................

..........................................................

3. ..........................................................

..........................................................

(3 x 2 = 6 புள்ளிகள்)

**14.** 1. 16 070 என்பதை சொற்களில் எழுதுக. ..........................................................

2. 

| 6 | |
|---|---|
| 3 | 5 |

| 3 | 4 |
|---|---|
| | 2 |

மேலுள்ள இரண்டு கட்டங்களில் இருந்தும் ஆக்கக் கூடிய மிகப் பெரிய எண்களுக்கிடையிலான வித்தியாசம் யாது?

..........................................................

3. ஒன்றிற்கும் ஐந்திற்கும் இடைப்பட்ட இலக்கங்களைக் கூட்டி வரும் விடையை உரோம எண்ணில் எழுதுக. ..........................................................








**4. அடுத்துவரும் எண்ணை எழுதுக.**

i. *7960, 7975, 7990,* ..........................

ii. *4000, 3500, 3000,* ..........................

5.  இவ்வுருவில் உள்ள செங்கோணம் அல்லாத கோணங்களின் எண்ணிக்கை யாது?

..........................................


6. i. கூட்டுக. $\frac{2}{5} + \frac{1}{3}$

ii. $1\frac{3}{10}$ தசமத்தில் எழுதுக. ..........................................................

7. *1* மணித்தியாலம் *45* நிமிடங்கள் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியொன்று பி.ப *5.00* மணிக்கு முடிவடைந்தது.

i. போட்டி முடிவடைந்த நேரத்தை நியம நேரமாக மாற்றி எழுதுக. ..........................................

ii. போட்டி ஆரம்பமான நேரம் யாது? ..........................................................

8.  நிறந் தீட்டப்பட்ட பகுதியின் பரப்பளவு *1* சதுர சென்ரிமீற்றர் எனின் முழு உருவின் சுற்றளவு யாது?

..........................................................

9. *90l* கொள்ளக் கூடிய பாத்திரம் ஒன்றில் $\frac{2}{3}$ பங்கு நீர் உள்ளது. பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்கு *10l* கொள்கலனால் எத்தனை தடவை நீர் ஊற்ற வேண்டும்? ..........................

10. 400g பருப்பின் விலை ரூபா 28.00 எனின் 750g பருப்பின் விலை யாது?


..........................................................

11. *4* மனிதர்கள் *2* நாட்களில் செய்து முடிக்கும் வேலையை *8* மனிதர்கள் எத்தனை மணித்தியாலங்களில் செய்து முடிப்பர்? ..........................................................

12. *4* சவர்க்காரக்கட்டிகளின் நிறை 160g எனின் *1* டசின் சவர்க்காரக் கட்டிகளின் நிறை யாது?

..........................................................

# போலந்தில் இடிந்து விழுந்தது கட்டடம்



## 4 பேர் பலி


வார்சா,மார்ச் 06

போலாந்து நாட்டில் ஓர் அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட எரிவாயு சிலிண்டர் வெடிப்பு காரணமாக அந்த கட்டடம் இடிந்து விழுந்த விபத்தில் சிக்கி நான்கு பேர் உயிரிழந்தனர்.

போலாந்து நாட்டின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள பொஸ்னான் நகரில் ஒரு அடுக்குமாடி குடியிருப்பு உள்ளது. இந்த கட்டடத்தில் 18 குடியிருப்புகள் உள்ளன. இந்நிலையில், இந்த கட்டடத்தில் நேற்றுமுந்தினம் மாலை ஒரு பயங்கர வெடிப்பு சத்தம் கேட்டுள்ளது. இதன்காரணமாக அந்த கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது. இந்தச் சம்பவத்தில் நான்கு குடியிருப்புகள் இடிந்து விழுந்தன.

இந்த விபத்தில் நான்கு பேர் உயிரிழந்தனர். மேலும் காயமடைந்த 20 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். முதல்கட்ட விசாரணையில் ஒரு வீட்டில் ஏற்பட்ட வாயுக் கசிவு தான் இந்த விபத்துக்குக் காரணம் எனத் தெரிய வந்துள்ளது.

# ராணுவ பட்ஜெட்டை அதிகரிக்கும் சீனா



பீஜிங்,மார்ச்.06

இராணுவ பலத்தைத் தொடர்ந்து அதிகரித்து வரும் சீனா, இந்த ஆண்டு தனது இராணுவ பட்ஜெட்டை 17 ஆயிரத்து 500 கோடி டொலராக உயர்த்தி யுள்ளது.

இராணுவத்திற்கு அதிக நிதி செலவு செய்து இராணுவத்தை நவீனப்படுத்தும் நாடுகளில் அமெரிக்காவுக்கு அடுத்த இடத்தில் சீனா உள்ளது. புதிய நீர்மூழ்கி கப்பல்கள், போர்க்கப்பல்கள் என தன் வலிமையை தொடர்ந்து அதிகரித்து வரும் சீனா, இதற்கான செலவினத்தை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டு பட்ஜெட்டில், இராணுவத்துக்கு 15 ஆயிரம் கோடி டொலர் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இது முந்தைய ஆண்டை விட 7 சதவீதம் அதிகம்.

இந்த நிலையில், இந்த ஆண்டு தனது இராணுவ பட்ஜெட்டை மேலும் 8.1 வீதம் உயர்த்தியுள்ளது. தேசிய மக்கள் காங்கிரஸில் (தேசிய சபை) தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டில், இராணுவத்துக்கு 17 ஆயிரத்து 500 கோடி டொலர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டு உள்ளது.

பிற பெரிய நாடுகளை ஒப்பிடுகையில், சீன அரசாங்கம் தனது மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தேசிய நிதிச் செலவில் இருந்து குறைந்த பங்கையே இராணுவ பட்ஜெட்டிற்கு எடுத்துக்கொண்டிருக்கின்றது எனத் தேசிய மக்கள் காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுடன் சமாதானம்

# வடகொரியா செல்கின்றது தென்கொரிய தூதுக்குழு

அமெரிக்காவுடன் சமாதானம் பேசுவதற்காக தென்கொரிய அரசின் தூதுக்குழு இன்று வடகொரியாவுக்கு செல்லவுள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உலகநாடுகளின் எதிர்ப்புகளை மீறியும் வடகொரிய அரசு தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது. இதனால் அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதித்தன.

இதற்கிடையே, தென் கொரியாவின் பியாங்யங் நகரில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் கடந்த மாதம் நடைபெற்றன. இந்தப் போட்டிகளில் பங்கேற்க வட கொரியா அரசு தனது வீரர்கள், வீராங்கனைகளை அனுப்பி வைத்தது. அதைத்தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையே பதற்றம் தணியும் நிலை ஏற்பட்டு வந்தது. இந்த நிலையில், அமெரிக்காவுடன் சமாதானம் பேசுவதற்காக தென் கொரிய அரசு, 10 பேர் கொண்ட தூதுக்குழுவை வடகொரியாவுக்கு இன்று அனுப்பவுள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அதிகாரிகள் கூறுகையில்,

தென் கொரிய அதிபர் மூன் ஜே உயர் அதிகாரிகள் அடங்கிய 10 பேர் கொண்ட தூதுக்குழுவை வட கொரியாவுக்கு அனுப்ப முடிவு செய்துள்ளார். இந்த தூதுக்குழு இன்று அங்கு சென்றடைகிறது. அப்போது அவர்கள் அமெரிக்காவுடன் சமாதானப் பேச்சில் ஈடுபடுவார்கள் எனத் தெரிவித்தனர்.

## சிரியாவில் போர் நிறுத்தத்தையும் மீறி

# அரசு படை மீண்டும் வான்வழி தாக்குதல்

## 11 குழந்தைகள் உட்பட 34 பேர் உயிரிழப்பு



டமாஸ்கஸ்,மார்ச் 06

சிரியாவில் உள்ள கிழக்கு கூட்டா பகுதியில் போர் நிறுத்தத்தை மீறி அரசு படையினர் நடத்திய வான்வழி தாக்குதலில் 11 குழந்தைகள் உட்பட 34 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவில் அதிபர் பாஷர் அல் அசாருக்கு எதிராக ஆயுதம் தாங்கி போரில் ஈடுபட்டு வரும், கிளர்ச்சிக் குழுக்கள், இராணுவத்தின் ஒரு பிரிவு ஆகியவற்றை ஒடுக்கும் பணியில் அதிபர் ஆதரவு படையினர் கடந்த 2012ஆம் ஆண்டு முதல் ஈடுபட்டு வருகின்றனர். 6 ஆண்டுகளாக நடைபெற்று வரும் உள்நாட்டுச் சண்டையில் லட்சக்கணக்கான மக்கள் இதுவரை பலியாகியுள்ளனர்.

கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக அமெரிக்காவும், அதிபருக்கு ஆதரவாக ரஷ்ய படைகளும் சண்டையிட்டு வந்த நிலையில் கிளர்ச்சிக்குழுக்களுக்கு ஆயுதங்கள் வழங்குவதை அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ. நிறுத்தியது. இதனால், அரசுப்படையினரின் கை ஓங்கிய நிலையில், கடந்த 18ஆம் திகதி முதல் அதிபர் ஆதரவு படை – ரஷ்யா இணைந்து கிழக்கு கூட்டா பகுதியில் ஆவேசத் தாக்குதல்கள் நடத்தி வருகிறது.

கிழக்கு கூட்டா பகுதியில் போராளிகளின்பிடியில் உள்ள பகுதிகளை மீட்பதற்காக கடந்த இருநாள்களாக அரசுப் படைகள் தாக்குதல் நடத்தி



வந்தன. இதன் விளைவாக சில நகரங்களையும், விவசாயப் பண்ணை நிலங்களையும் கைப்பற்றியுள்ளோம் எனச் சிரியா இராணுவம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில், சிரியாவில் அரசு படைகள் மற்றும் போராளி குழுக்களுக்கு இடையிலான இடைக்கால போர் நிறுத்தத்துக்கு ஐ.நா.சபை ஏற்பாடு செய்தது. இந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தையும் மீறி சிரியாவின் கிழக்கு கூட்டா பகுதியில் சிரிய அரசு படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் 11 குழந்தைகள் உட்பட சுமார் 34 பேர் உயிரிழந்துள்ளனர் எனச் சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் தலைவர் அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுந்தினம் இதேபகுதியில் துருக்கி இராணுவம் நடத்திய வான்வழி தாக்குதலில் 36 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சீன அதிபரின் பதவிக்காலம் நீடிப்புக்கு ட்ரம்ப் வரவேற்பு

வொஷிங்டன்,மார்ச் 06

சீனாவில் இருமுறை மட்டுமே ஒருவர் அதிபராக இருக்க முடியும் என்ற விதி திருத்தப்பட்டதற்கு வரவேற்பு தெரிவித்துள்ள ட்ரம்ப், அமெரிக்காவிலும் அதுபோல ஒரு நாள் வரும் எனத் தெரிவித்துள்ளார்.

சீனாவின் அரசமைப்பு சட்டத்தில் உள்ள பத்தாண்டுகள் வரை ஆட்சிசெய்து இரண்டாவது பதவிக் காலத்தை நிறைவு செய்தவர்கள் அடுத்து மூன்றாவது முறையாக அதிபர் மற்றும் துணை அதிபர் தேர்தல்களில் போட்டியிடக் கூடாது என்னும் நிபந்தனையை நீக்கம் செய்யப் போவதாக கட்சி மேலிடம் அறிவித்துள்ளது.

இதற்கான பிரேரணையை நேற்று முன்தினம் ஆரம்பித்த



சீன நாடாளுமன்றத்தில் ஆளுங் கட்சி தாக்கல் செய்துள்ளது. இந்த நிலையில், சீன அரசின் இந்த முடிவுக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் வரவேற்பும், வாழ்த்தும் தெரிவித்துள்ளார். நூற்றாண்டில் சக்தி வாய்ந்த அதிபராக ஜி ஜின்பிங் இருப்பார் என ட்ரம்ப் வாழ்த்தியுள்ளார்.

மேலும், நாங்களும் இது போன்ற அதிரடியை என்றாவது எடுக்கக் கூடும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க அதிபர் பதவிக்காலத்தை இரண்டு முறைக்கு மேல் நீடிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வரும் டொனால்ட் ட்ரம்ப் தற்போது சீன அதிபருக்கு வாழ்த்து கூறியதன் மூலம் தனது ஆதங்கத்தை மீண்டும் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒஸ்கார் விருது விழாவில் நடிகை ஸ்ரீதேவிக்கு அஞ்சலி



லொஸ் ஏஞ்சல்ஸ்,மார்ச் 06

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடந்த 90 ஆவது ஒஸ்கார் விருது வழங்கும் விழாவில், நடிகை ஸ்ரீதேவி உட்பட மறைந்த நடிகர், நடிகைகள் மற்றும் கலைஞர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் வண்ணமயமான 90 ஆவது ஒஸ்கார் விருது வழங்கும் விழா நேற்று நடந்தது. அதில் மறைந்த நடிகர், நடிகைகள் மற்றும் கலைஞர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடந்தது.

அதில் சமீபத்தில் மரணமடைந்த நடிகை ஸ்ரீதேவிக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேபோன்று மறைந்த இந்தி நடிகர் சசிகபூருக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

## திரிபுராவில் ஏற்பட்ட நிலை தமிழகத்திலும் ஏற்படும்

### தமிழிசை சூளுரை

சென்னை,மார்ச் 06

திரிபுராவில் ஏற்பட்ட நிலை தமிழகத்திலும் ஏற்படும் என தமிழக பா.ஜனதா கட்சி தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்தார். காவிரிப் பிரச்சினையை வைத்து பிரதமரின் புகழுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் மு.க. ஸ்டாலின் செயற்படுகிறார். காவிரி பிரச்சினையில் முதலமைச்சர் அழைத்தாலும்,துணைத் தலைவர் வரவேண்டும் என்பதற்காக ஒரு நாள் தாமதமாக செல்கிறார்.



உண்மையைத் திரித்து காவிரியை வைத்து ஸ்டாலின் அரசியல் செய்கிறார். இலங்கைப் பிரச்சினையில் நாடகம் நடத்தியது தெரியும். காவிரி பிரச்சினையில் ராஜினாமா செய்ய துணைக்கு ஏன் அ.தி.மு.க. எம்.பிக் களை அழைக்கிறீர்கள். துணிவு இருந்தால் 4 தி.மு.க. எம்.பிக்களின் ராஜினாமா கடிதத்தை உடனே தாருங்கள். பிரதமர் செய்ய வேண்டிய நேரத்தில் செய்வார். சந்திக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது.

தமிழகத்தை உதாசீனப்படுத்த வேண்டிய சூழ்நிலை பிரதமருக்கு கிடையாது. காவிரி மேலாண்மை சபையை அமைக்கும் அடிப்படை பணிகள் தொடங்குகின்றன. திரிபுராவில் கம்யூனிஸ்டு கட்சி நிராகரிக்கப்பட்டு உள்ளதை ஒப்புக்கொள்ள வேண்டும். திரிபுராவில் ஏற்பட்ட நிலை, தமிழகத்திலும் ஏற்படும் என்று தெரிவித்துள்ளார்.

## காஷ்மீரின் எல்லையில் 6 பேர் சுட்டுக் கொலை



ஸ்ரீநகர்,மார்ச் 06

காஷ்மீர் மாநிலம் சோபியான் மாவட்டத்தில் பயங்கரவாதிகளுக்கும் இராணுவ வீரர்களுக்கும் இடையே நடந்த சண்டையில் 2 பயங்கரவாதி உட்பட 6 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

காஷ்மீர் மாநிலம் சோபியான் மாவட்டத்தில் போகன் நகர் அருகே அமைக்கப்பட்டுள்ள நடமாடும் வாகன சோதனை சாவடி மையத்தில் இராணுவத்தினர் கூட்டாக கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அந்த வழியாக வந்த ஒரு காரில் வந்த பயங்கரவாதிகள் பாதுகாப்பு படையினரை நோக்கித் துப்பாக்கியால் சுட்டனர். பதிலுக்கு இராணுவ வீரர்களும் தாக்குதல் நடத்தினர். அதில் 2 தீவிரவாதிகள் உட்பட அவர்களுக்கு உடந்தையாகச் செயல்பட்ட மேலும் 4 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

## கார்த்தி சிதம்பரத்தின் மேலும் ஒரு பணப்பரிமாற்றம் அம்பலமாகியது





மும்பை,மார்ச் 06

கார்த்தி சிதம்பரத்துக்கு லஞ்சம் கொடுத்ததை விசாரணையின் போது இந்திராணி முகர்ஜி மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்தியுள்ளார். இதுதவிர மேலும் ஒரு பணப்பரிமாற்றம் அம்பலமாகியுள்ளது.

பணப்பரிமாற்ற முறைகேடு வழக்கில் முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரத்தை கடந்த வாரம் சி.பி.ஐ. கைது செய்தது.

அவரை 5 நாட்கள் காவலில் வைத்து விசாரிக்க சி.பி.ஐ இற்கு நீதிமன்று அனுமதி வழங்கியது. இதையடுத்து கார்த்தி சிதம்பரத்திடம் கடந்த 2ஆம் திகதி முதல் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில் கார்த்தி சிதம்பரம் மூத்த அரசியல் தலைவர் ஒருவருக்கு 1.8 கோடி ரூபா பணபரிமாற்றம் செய்தமை தெரிய வந்துள்ளது. அமுலாக்கத்துறை அதிகாரிகள் இதை அம்பலப்படுத்தியுள்ளனர்.

சென்னையில் உள்ள ஸ்கொட்லாந்து றோயல் வங்கி கிளையில் இருந்து இந்தப் பண பரிமாற்றம் நடந்துள்ளது. இதுபற்றி அமுலாக்கத்துறை அதிகாரிகள் தீவிர விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

## ஸ்டாலினை முதல்வராக்க மக்கள் விரும்பவில்லை

### அமைச்சர் ஜெயக்குமார்

சென்னை,மார்ச் 06

மு.க.ஸ்டாலின் முதல்வராக வேண்டும் என்று தி.மு.க. தொண்டர்கள் தான் விரும்புகிறார்களே தவிர பொதுமக்கள் விரும்பவில்லை என்று அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளார்.




மு.க.ஸ்டாலின் பக்குவப்பட்ட தலைவர் என்று நான் நினைக்கவில்லை. ஏனென்றால் முதலமைச்சர் ஆரோக்கியமான ஜனநாயக முறைப்படி எல்லோரையும் ஒருங்கிணைத்துச் செல்ல வேண்டும். காவிரி பிரச்சினையில் நாம் ஒன்றாக கூட வேண்டும். விருப்பு வெறுப்புகளைக் கடந்து நமது ஒரே நோக்கம் காவிரி நீரைப் பெற வேண்டும். உச்சநீதிமன்ற தீர்ப்பை அமுல்படுத்த வேண்டும். என்பதை மட்டும் குறிக்கோளாக வைத்து மனசாட்சியை மறந்து பேசும்போது சொல்லாத ஒன்றை வெளியில் போய் மு.க.ஸ்டாலின் சொல்கிறார்.

மு.க.ஸ்டாலின் முதல்வராக வேண்டும் என்று தி.மு.க. தொண்டர்கள் தான் விரும்புகிறார்களே தவிர பொதுமக்கள் விரும்பவில்லை. காவிரி பிரச்சினையில் ராஜினாமா செய்வோம் எனக் கூறும் தி.மு.க. எம்பிக்களை, இலங்கை தமிழர் பிரச்சினையின் போது ஏன் தி.மு.க. எம்.பிக்கள் ராஜினாமா செய்ய வைக்கவில்லை என்று கேள்வியெழுப்பியுள்ளார்.

### சிறையில் சொகுசு வசதிகள்:

## சசியிடம் விசாரணை நடத்த ஊழல் தடுப்பு பொலிஸ் முடிவு

சிறையில் சொகுசு வசதிகள் செய்து தர 2 கோடி ரூபா லஞ்சம் கொடுத்தார் என எழுந்த குற்றச்சாட்டில் சசிகலாவிடம் விசாரணை நடத்த ஊழல் தடுப்பு படை பொலிஸார் முடிவு செய்துள்ளனர்.



சொத்துக் குவிப்பு வழக்கில் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

சிறையில் சசிகலாவுக்கு சொகுசு வசதிகள் செய்து தரப்பட்டு இருந்தன. இதுதொடர்பாக சிறையில் ஆய்வு நடத்தி டி.ஐ.ஜி. ரூபா அறிக்கையை சிறைத்துறை டி.ஜி.பி. சத்தியநாராயணராவிடம் தாக்கல் செய்திருந்தார்.

இது தொடர்பாக ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி வினய்குமார் தலைமையில் விசாரணை நடத்தப் பட்டது.

விசாரணை அறிக்கையை கர்நாடக உள்துறை அமைச்சகத்திடம் ஒப்படைத்தார். அந்த அறிக்கையில். டி.ஐ.ஜி. ரூபாவின் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் உண்மை என்றும் கூறியிருந்தார். ஆனால், 2 கோடி ரூபா லஞ்சம் வாங்கிய விவரம் தொடர்பாக அவர் அறிக்கையில் எதுவும் குறிப்பிடவில்லை.

இந்த நிலையில் இலஞ்ச விவகாரம் தொடர்பாக கர்நாடக மாநில ஊழல் தடுப்பு படை பொலிஸாருக்கு விசாரணை உத்தரவிடப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக ஊழல் தடுப்பு படையினர் சிறைக்குச் சென்று சசிகலாவிடம் விசாரணை நடத்தவுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

## என்னிடம் எதிர்பார்ப்பதை உங்களிடம் எதிர்பார்ப்பேன்

### -கமல்ஹாசன்

நீங்கள் என்னிடம் என்னவெல்லாம் எதிர்பார்க்கிறீர்களோ, அவை அனைத்தையும் நான் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறேன் என மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் பேசியுள்ளார். எதிர்காலத்தை மாற்ற மாணவர்கள் முன்வர வேண்டும். மாற்றங்கள் அனைத்தும் நம்மிடம் இருந்தே தொடங்க வேண்டும். தவறுகள் எல்லா அரசிலும் நிகழும். நீங்கள் இல்லாமல் என்னால் எதையும் செய்ய முடியாது.

மக்களுக்கு உதவாத அரசு 'ஓட்டை படகுபோல் மூழ்கிவிடும்.' நீங்கள் என்னை தலைவர் என்று அழைக்க வேண்டாம். நான் உங்களை தலைவா என்று அழைக்க வேண்டும். நீங்கள் என்னிடம் இருந்து என்னவெல்லாம் எதிர்பார்க்கிறீர்களோ, அவை அனைத்தையும் நான் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறேன். என்று தெரிவித்துள்ளார்.



டேர்பன் டெஸ்ட்:

# ஆஸ்திரேலியா 118 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி

தென்னாபிரிக்காவின் டேர்பனில் நடைபெற்று வந்த தென்னாபிரிக்காவிற்கு எதிரான முதல் டெஸ்டில் ஆஸ்திரேலியா 118 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்கா – ஆஸ்திரேலியா இடையிலான முதல் டெஸ்ட் போட்டி டேர்பனில் நடைபெற்றது. ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 351 ஓட்டங்களும், தென்னாபிரிக்கா 162 ஓட்டங்களும் சேர்த்தது. பின்னர் 2ஆவது இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா 227 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது.

முதல் இன்னிங்ஸில் 189 ஓட்டங்கள் முன்னிலை பெற்றதால் தென்னாபிரிக்கா அணியின் வெற்றிக்கு 417 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயித்தது ஆஸ்திரேலியா.

நேற்று முன்தினம் 4 ஆவது நாள் ஆட்டத்தில் 417 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென்னாபிரிக்கா களம் இறங்கியது. தொடக்க வீரர் எய்டன் மார்க்ராம் ஒருபுறம் நிலைத்து நின்று விளையாட மறுமுனையில் டீன் எல்கர் (9 ஓட்டங்கள்), அம்லா (8 ஓட்டங்கள்), டி வில்லியர்ஸ் (0 ஓட்டங்கள்), டு பிளிசிஸ் (4 ஓட்டங்கள்), டி ப்ரூயின் (36 ஓட்டங்கள்) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

6ஆவது விக்கெட்டுக்கு மார்க்ராம் உடன் குயின்டான் டி கொக் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி நிலைத்து நின்று விளையாடியது. இதனால் தென்னாபிரிக்காவிற்கு வெற்றி பெற்று விடலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. அதேசமயத்தில் ஆஸ்திரேலியா அணியினர் கலக்கம் அடைந்தனர்.

தென்னாபிரிக்காவின் ஓட்டங்கள் 283 ஆக இருக்கும்போது மார்க்ராம் 143 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மிட்செல் மார்ஷ் பந்தில் ஆட்டமிழந்தார். அப்போதுதான் ஆஸ்திரேலிய வீரர்கள் பெருமூச்சு விட்டனர். மார்க்ராம் அவுட்டானது தென்னாபிரிக்காவின் தோல்வி உறுதியானது.

அடுத்து வந்த பிலாண்டர் (6 ஓட்டங்கள்), மகாராஜ் (0 ஓட்டங்கள்), ரபாடா (0 ஓட்டங்கள்) ஸ்டோர்க் பந்தில் ஆட்டமிழக்க நேற்றைய



4ஆவது நாள் ஆட்ட முடிவில் தென்னாபிரிக்கா 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 293 ஓட்டங்கள் எடுத்திருந்தது. டி கொக் 81 ஓட்டங்களுடனும், மோர்னே மோர்கல் ஓட்டங்கள் எவையும் எடுக்காமல் களத்தில் இருந்தனர்.

மார்க்ராம் ஆட்டமிழந்த பிறகு தென்னாபிரிக்கா 3.5 ஓவர்கள் விளையாடியதும் 4 ஆவது நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. மார்க்ராம் 23 பந்துகள் தாக்குப்பிடித்திருந்தால் ஆட்டத்தின் போக்கே மாறியிருக்கும்.

நேற்று கடைசி நாள் ஆட்டம் தொடங்கியது. டி கொக் 83 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஹசில்வுட் பந்தில் ஆட்டமிழக்க தென்னாபிரிக்கா 92.4 ஓவர்களில் 298 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது. இதனால் ஆஸ்திரேலியா 118 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முதல் இன்னிங்சில் 5 விக்கெட்டுகளும், 2ஆவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகளும் வீழ்த்திய மிட்செல் ஸ்டோர்க் ஆட்டநாயகன் விருதைப் பெற்றார்.

நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆஸ்திரேலியா 1:0 என முன்னிலை பெற்றது. 2ஆவது டெஸ்ட் வருகிற 9 ஆம் திகதி போர்ட் எலிசபெத்தில் இடம்பெறவுள்ளது.

(ப)



# மெஸ்ஸி 600

லா லிகா உதைபந்து தொடரில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் பார்சிலோனா கிளப் அணி வெற்றி பெற்றது. இந்த போட்டியில் மெஸ்ஸி ஒரு கோல் அடித்தமையின் மூலம் 600 கோல்களை எட்டியுள்ளார்.

லா லிகா கால்பந்து தொடரில் பார்சிலோனாவில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் பார்சிலோனா 1:0 என்ற கோல் கணக்கில் அட்லெடிகோ மட்ரிட்டை வீழ்த்தியது. வெற்றிக்குரிய கோலை 26ஆவது நிமிடத்தில் 'பிரீ கிக்' வாய்ப்பில் லயோனல் மெஸ்ஸி கோல் அடித்தார்.

தனது தொழில்முறை உதைபந்து வாழ்க்கையில் 30 வயதான மெஸ்ஸி அடித்த 600ஆவது கோல் இதுவாகும். அவர் இதுவரை பார்சிலோனா கிளப்புக்காக 539 கோல்களும், ஆர்ஜென்டீனா அணிக்காக 61 கோல்களும் அடித்துள்ளார்.

# தள்ளி வைக்கப்பட்டுள்ள ஐ.பி.எல். ஆரம்ப விழா

ஏப்ரல் 6ஆம் திகதி நடைபெற இருந்த ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டியின் தொடக்க விழா 7ஆம் திகதிக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

இதுவரை 10 ஐ.பி.எல். போட்டி நடைபெற்றுள்ளன. இதில் மும்பை இந்தியன்ஸ் 3 முறையும், சென்னை சூப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் தலா 2 முறையும், ராஜஸ்தான் ரோயல்ஸ், டெக்கான் சார்ஜர்ஸ், சன்ரைசர்ஸ் ஐதராபாத் ஆகிய அணிகள் தலா ஒரு முறையும் ஐ.பி.எல். கிண்ணத்தை வென்றுள்ளன.

2 ஆண்டுத் தடைக்கு பிறகு சென்னை சூப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் இதில் பங்கேற்கின்றன. மும்பை இந்தியன்ஸ், கொல்கத்தா நைட்ரைடர்ஸ், ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர், டில்லி டேர்டெவில்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப், ஐதராபாத் சன்ரைசர்ஸ் ஆகிய அணிகளும் கலந்து கொள்கின்றன. மொத்தம் 8 அணிகள் விளையாடுகின்றன.




இந்தப்போட்டி தொடக்க விழா ஏப்ரல் 6ஆம் திகதி மும்பை கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் தொடக்க விழா ஏப்ரல் 7ஆம் திகதிக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது. அதாவது முதல் போட்டி நடைபெறும் தினத்தில்தான் தொடக்க விழா நடைபெறும். அதோடு மும்பை வான்கடே மைதானத்துக்கு தொடக்க விழா மாற்றப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றால் நியமிக்கப்பட்ட நிர்வாகக் குழுதான் இந்த முடிவை எடுத்து அறிவித்தது.

# முத்தரப்பு ரி-20 தொடரில் பங்கேற்க இலங்கை வந்தது இந்திய அணி

ரோகித் சர்மா தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி, இலங்கை, பங்களாதேஷ் அணிகளுடனான முத்தரப்பு ரி-20 தொடரில் விளையாடுவதற்காக இலங்கை வந்தடைந்தது.

இதற்கான இந்திய அணி கடந்த வாரம் அறிவிக்கப்பட்டது. இந்திய அணியின் முன்னணி வீரர்கள் தென்னாபிரிக்கா தொடரில் தொடர்ந்து விளையாடியதன் காரணத்தாலும், ஐ.பி.எல். தொடருக்குப்பின் தொடர்ந்து வெளிநாட்டு தொடர்கள் இருப்பதாலும் கப்டன் விராட் கோஹ்லி, டோனி, ஹர்திக் பண்டையா, வேகப்பந்து வீச்சாளர்கள் பும்ரா, புவனேஸ்வர் குமார், சுழற்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ் ஆகியோருக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. ரோகித் சர்மா தலைமையில் இந்தியா தொடரைச் சந்திக்கிறது.

இந்த நிலையில், இந்த முத்தரப்பு ரி-20 தொடரில் விளையாட இருக்கும் ரோகித் சர்மா தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி நேற்று முன்தினம் இலங்கை வந்தடைந்தது. இன்று நடைபெறும் முதல் ரி-20 போட்டியில் இந்திய அணி, இலங்கையை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகக்கிண்ண கிரிக்கெட் தகுதி சுற்று: ஆப்கானிஸ்தான் அதிர்ச்சித் தோல்வி

அடுத்த ஆண்டு நடக்க இருக்கும் உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான தகுதிச் சுற்றுப் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி தோல்வி அடைந்துள்ளது.

10 அணிகளுக்கிடையிலான 12ஆவது உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு (2019) மே 30ஆம் திகதி முதல் ஜுலை 14ஆம் திகதி வரை இங்கிலாந்தில் இடம்பெறவுள்ளது.

அதில் தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, இந்தியா, ஆஸ்திரேலியா, இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் போட்டியை நடத்தும் இங்கிலாந்து ஆகிய 8 அணிகள் நேரடியாகத் தகுதி பெற்றன. எஞ்சிய இரு அணிகள் தகுதிச் சுற்று மூலம் தேர்வாகும்.

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான தகுதி சுற்றுப் போட்டி ஸிம்பாப்வேயில் நேற்று முன்தினம் தொடங்கியது. வருகிற 25 ஆம் திகதி வரை இடம்பெறும் இந்தத் தகுதி சுற்றில் பங்கேற்றுள்ள 10 அணிகள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு லீக்கில் மோதுகின்றன.

முதல் நாளில் 4 லீக் ஆட்டங்கள் நடந்தன. வளர்ந்து வரும் அணிகளில் ஒன்றான ஆப்கானிஸ்தான் அணி, ஸ்கொட்லாந்தை (பி பிரிவு) சந்தித்தது. இதில் முதலில் துடுப்பாடிய ஆப்கானிஸ்தான் 49.4 ஓவர்களில் 255 ஓட்டங்கள் சேர்த்தது.

அடுத்துக் களம் கண்ட ஸ்கொட்லாந்து அணி 47.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கு 256 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, ஆப்கானிஸ்தானுக்கு அதிர்ச்சி அளித்தது.

(ப)

## பற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முஸ்லிம் இளைஞர்கள் சிலரின் தாக்குதலால் படுகாயமடைந்தார் எனக் கூறப்படும் பெரும்பான்மை இனத்தவர் ஒருவர் உயிரிழந்தமையே இந்த வன்முறைக்குக் காரணம் எனக் கூறப்பட்டது.

தெல்தெனிய, திகண பகுதிகளில் முஸ்லிம் மக்கள் மீது சிங்களக் கும்பல்கள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்தே பதற்ற நிலை ஏற்பட்டது.

அங்குள்ள பள்ளிவாசல்கள் சேதப்படுத்தப்பட்டு, முஸ்லிம்களின் வியாபார நிலையங்கள் மற்றும் சொத்துக்கள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. முஸ்லிம்கள் வாழும் குடியிருப்புக்கள் மீது சரமாரியாகக் கல் வீச்சுத் தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளன. முஸ்லிம்கள் பலர் தாக்கப்பட்டுக் காயத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

திகண நகரிலுள்ள பல வீடுகள் மற்றும் கடைகளுக்கு தீவைக்கப்பட்டுள்ளது. நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பொலிஸ் மற்றும் தீயணைப்புப் படையினர் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டனர்.

இரு தரப்பினருக்கு இடையேயும் நேற்று மோதல் வெடித்ததால், அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக நேற்று முதல் இன்று காலை 6 மணிவரை அங்கு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி வாகனங்கள் தொடர்பான பிரச்சினை ஒன்றில் 41 வயதான பெரும்பான்மை இனத்தவர் ஒருவர் கடுமையாகக் காயமடைந்து கண்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். சிகிச்சை பயனின்றி கடந்த சனிக்கிழமை அவர் மரணமானார். உயிரிழந்தவரின் வீட்டுக்குப் பொது பலசேனவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்று முன்தினம் இரவு சென்று உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்.

இதன் பின்னர் தெல்தெனியவில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்களின் மீது நேற்று முன்தினம் இரவு தாக்குதல்கள் நடத்தப்பட்டன. சில கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன. சில வாகனங்களும் தாக்கப்பட்டன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக 24 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த நிலையில், அங்கு நேற்றுப் பதற்றநிலை அதிகரித்தது. உயிரிழந்த பெரும்பான்மை இனத்தவரின் இறுதிச் சடங்கு நேற்று நடந்தது. இதன்போதே வன்முறை வெடித்ததாகப் பொலிஸார் கூறினர்.

திகண பகுதியில் இரண்டு இனங்களையும் சேர்ந்த குழுக்களுக்கிடையில் பெரும் மோதல்கள் வெடித்தன. மோதலில் ஈடுபட்டவர்களைக் கலைக்கப் பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளையும் வீசினர்.

இதேவேளை, திகணவில் ஏற்பட்ட அமைதியின்மையின் போது கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரி தெல்தெனிய பொலிஸ் நிலையத்திற்கு முன்பாகவும் நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பு மங்களாராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தலைமையில் தெல்தெனிய பொலிஸ் நிலையம் முன் இடம்பெற்றது.

திகணவில் இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழந்த நபர் சுமணரத்ன தேரரின் உறவினர் எனக் கூறப்பட்டது.

### ஊரடங்கு அமுல்

கண்டியில் ஏற்பட்ட பதற்ற நிலையைக் கருத்தில் கொண்டு மாவட்டம் முழுவதும் உடனடியாக ஊரடங்குச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இன்று காலை 6 மணி வரை ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகப் பொலிஸாரும், படையினரும் குவிக்கப்பட்டுப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

### முஸ்லிம் வீடுகள் தீக்கிரை

முஸ்லிம்களின் சொத்துக்கள் வீடுகளுக்கு வெளியே எடுக்கப்பட்டு தீ மூட்டப்பட்டுள்ளன. இதன்போது உதவி கேட்டு முஸ்லிம்கள் கதறினர் எனக் கூறப்பட்டது. பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தபோதும் வன்முறை தீவிரமடைந்தது எனக் கூறப்படுகிறது.

### கைதானவர்களை விடுவிக்க முயற்சி

தெல்தெனியாவில் பதற்றத்தை ஏற்படுத்தி, முஸ்லிம் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் கைதானவர்களை விடுவிக்க மஹிந்த ஆதரவு எம்.பியான திலும் அமுனுகம முயற்சித்துள்ளார்.

மத்திய மாகாண ஐ.தே.க. உறுப்பினர் லாபிர் ஹாஜியார் இந்தத்தகவலைத்தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு தெல்தெனிய பொலிஸ் நிலையம் சென்ற திலும் அமுனுகம கைதான பெரும்பான்மை இனத்தவர்களை விடுவிக்க முயற்சித்துள்ளார், அது பயனளிக்காத நிலையில், நேற்று அதிகாலை மீண்டும் பொலிஸ் நிலையம் சென்று கைதானவர்களை விடுவிக்க முயற்சித்தார். எனினும் பொலிஸார் இதற்கு அனுமதியளிக்கவில்லை.

தெல்தெனிய மற்றும் திகண உள்ளிட்ட சில பிரதேசங்களில் வீதிகளில் ரயர்கள் பற்றவைக்கப்பட்டு, பதற்றநிலை திட்டமிட்டு உருவாக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

### பள்ளிவாசல்கள் மீது தாக் குதல்

பல்லேகல, தெல்தெனிய உள்ளிட்ட முஸ்லிம் பிரதேசங்களில் அமைந்துள்ள பல பள்ளிவாசல்கள் மீதும் ஒரே நேரத்தில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சுயாதீன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொலிஸாருக்கும் பாதுகாப்புத் தரப்பினருக்கும் பணித்துள்ளார்.

அத்துடன் பிரதேசத்தின் சகல மக்களினதும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நிலைமைகளைத் தவித்துக் கொள்வதற்காகச் சகல தரப்பினருடனும் இணைந்து பொறுப்புடன் செயலாற்றுமாறு பாதுகாப்புத் தரப்பினரை அறிவுறுத்திய ஜனாதிபதி, பிரதேசத்தில் சமாதானத்தை உறுதி செய்வதற்கு மேற்கொள்ளவேண்டிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கியுள்ளார். (ஐ)

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எச்சரித்துள்ளார் லங்கா சமசமாஜக் கட்சியின் தலை வர் பேராசிரியர் திஸ்ஸ விதா ரண.

இந்த நிலைமை நீடித்தால் 77ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏற்பட்ட ஒரு கலவரம் மீண்டும் ஏற்படும் என்றும், அதனை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் அவர் கோரினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

இந்த நாட்டில் தற்போது மத வாதம் தலை தூக்கியுள்ளது. அது இந்த நாட்டுக்கும், தேசிய நல்லிணக்கத்துக்கும் பாரிய ஆபத்தானது.

உதாரணமாக அம்பாறையில் முஸ்லிம் மக்களின் வீடுகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன. சம்பவம் நடைபெறும்போது பொலிஸார் அதனைத் தடுக்காமல் அமைதியாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருந்துள்ளனர்.

யாரும் சட்டத்தை மீறி இது போன்ற நாசகாரச் செயல்களில் ஈடுபடுவார்களேயானால் மேல் மட்டத்திலிருந்து கட்டளை வரும் வரைப் பார்த்துக் கொண்டிருக்காமல், அதனைத் தடுக்க பொலிஸார் உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும்.

ஆனால் இந்த இடத்தில் வன்முறைக்கு இடம்கொடுத்து பொலிஸார் அமைதியாக இருந்தமையால் அவர்களுக்கு மேலிடத்திலிருந்து கட்டளை ஏதும் பிறப்பிக்கப்பட்டதா என்று நாம் சந்தேகம் கொள்கிறோம்.

அதுமாத்திரமன்றிக் கோயில்கள் உடைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவங்கள் மூலம் மக்கள் ஒருவிதமான மன நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

அரசு இந்த நிலைமையை இப்படியே நீடிக்க விடுமாயின், 1977ஆம் ஆண்டின் பின்னர் இந்த நாட்டில் ஏற்பட்ட அதே நிலைமை மீண்டும் ஏற்படலாம். – என்றார். (ஐ)

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது குடும்ப ஆதிக்கத்தை நிலை நிறுத்துவது தொடர்பாக, ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள், முக்கிய கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர் எனக் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் முக்கியமாக, 2020 அதிபர் தேர்தலில், முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷவைப் போட்டியில் நிறுத்துவது தொடர்பாக விரிவாக ஆலோசிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அத்துடன், தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவை நியமிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கலந்துரையாடலில் ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பங்கேற்றனர் என்றும் கூறப்பட்டது. (ஐ)

## தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

கிளிநொச்சியிலும் இந்தப் பின்னடைவு தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி உறுப்பினர்களிடம் விளக்கமளிக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும், பெரும்பாலான வட்டாரங்களில் கூட்டமைப்பே வெற்றி பெற்றுள்ளது. இந்தப் பின்னடைவு பற்றி ஆராய்ந்து எதற்காக இந்தப் பின்னடைவு ஏற்பட்டது என்பதைக் கவனத்தில் கொண்டு கூட்டமைப்பைப் பலம் பொருந்திய சக்தியாக மாற்றுவதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பெரும்பான்மை பெறமுடியாத சபைகளில் எந்தக் கட்சியுடன் இணைந்து ஆட்சியமைப்போம் என்பதை இன்னும் குறிப்பிடவில்லை. அது பற்றிப் பொது நிறுவனங்கள், சிவில் சமூகத்தவர்கள் பல கட்சிகளுடனும் பேசிக்கொண்டிருக்கின்றார்கள்.

யார் யார் எங்களை ஆதரிக்க முடியும், யார் வெளியிலிருந்து ஆதரவு வழங்க முடியும் என்பதை அறிந்து சபையைத் திறம்பட நடத்திச் செல்லக் கூடிய எல்லா நடவடிக்கைகளையும் எடுப்போம். – என்றார்.

காணாமற்போனோர் அலுவலகத்தையும், அந்த உறுப்பினர்களையும் ஏற்றுக்கொள்கின்றீர்களா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர்,

இது ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கையாகவே பார்க்கின்றோம். இது கூட இடம் பெறவில்லை என்றால் எந்த முன்னேற்றமும் ஏற்படாது. கூட்டமைப்பும், வல்லரசு நாடுகளும் இணைந்து எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக மனித உரிமைகள் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் அரசுக்குக் கொடுக்கப்பட்ட அழுத்தத்தால் இந்த அலுவலகம் அமைக்கப்பட்டிருப்பது ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கைதான்.

ஆனாலும், இது எவ்வளவு தூரம் நம்பகத்தன்மைகொண்டதாகவும், மக்கள் எதிர்பார்க்கின்ற அளவுக்கு அந்த மக்களை நம்ப வைக்க கூடியதாகவும் நடவடிக்கைகளை எடுக்கப் போகின்றார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். எந்த அலுவலகமாக இருந்தாலும் அது மக்களின் நம்பிக்கை கொண்டதாக இருக்கவேண்டும். – என்றார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு கூட்டமைப்பும் ஆதரவு வழங்குமா என அவரிடம் கேள்வி எழுப்பியபோது,

அது தொடர்பில் கூட்டமைப்பு மிகவும் கவனமாக இருக்கிறது அந்தப் பிரேரணை எந்தெந்த அடிப்படையில் வருகிறது என்பதை நாங்கள் ஆராய்வோம். நாளை (இன்று) அல்லது நாளை மறுதினம் (நாளை) எங்கள் நாடாளுமன்றக் குழு இந்த விடயத்தில் கூடி ஆராய்ந்து உரிய நடவடிக்கையை உரிய நேரத்தில் அறிவிப்போம் என்று பதிலளித்தார். (ஐ)

## பரபரப்பான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேரணை தொடர்பாகப் பேச்சுக்கள் இடம்பெற்றுவருகின்ற பரபரப்பான சூழலில் இன்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் கூடுகிறது.

நாடாளுமன்றம் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கூடவுள்ளது. பெரும்பாலும் நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று சபாநாயகரிடம் கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் இலங்கை அரசியலில் பெரும் நெருக்கடியான நிலை தோன்றியுள்ளது. இதன்படி ஆரம்பத்தில் தேசிய அரசைக்கொண்டு செல்வது தொடர்பில் சிக்கலான நிலைமை ஏற்பட்டபோது தேசிய அரசைத் தொடர்ந்து கொண்டு செல்வாம் என ஐக்கிய தேசியக் கட்சி சார்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக அதன் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மஹிந்த அமரவீரவும் சென்ற நாடாளுமன்றக் கூட்டத்தொடரின்போது கூட்டாகத் தெரிவித்தனர்.

அதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு விடயத்திலும் அமைச்சரவை மாற்றத்திலும் அதிருப்தி கொண்டு அக்கட்சிக்குள் பெரும் உட்பூசல் எழுந்துள்ளது. இந் நிலையில் இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப் போவதாக அறிவித்தார். இந் நிலையில் கூட்டு எதிரணி பிரதமருக்கு எதிராகவும் அரசுக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரத்திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பிரேரணைக்கு ஐக்கிய தேசியக் கட்சியினர் ஒரு சிலரும் ஆதரவு நல்கப் போவதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி இன்று மார்ச் மாதத்துக்கான நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமாகவுள்ள நிலையில், இவ்வாரம் நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கையளிக்கவுள்ளதாக கூட்டு எதிரணி தெரிவித்துள்ளது.

பெரும்பாலும் இன்று செவ்வாய்க்கிழமை நம்பிக்கையில்லாப் பிரேரணையை கூட்டு எதிரணி கையளிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## பதற்றத்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

கண்டி மாவட்டத்துக்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளின் அதிபர்களுக்கும் இந்த விடயம் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

கண்டி – திகண நகரில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கண்டி நிர்வாக மாவட்டப் பகுதியில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்துப் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# பொன்சேகாவை சட்டம், ஒழுங்கு அமைச்சராக நியமிக்க மீண்டும் பரிந்துரைக்கின்றது ஐக்கிய தேசியக் கட்சி!



பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகாவை, சட்டம், ஒழுங்கு அமைச்சராக நியமிக்குமாறு மீண்டும் பரிந்துரைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்திருப்பதாக, கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே, சரத் பொன் சேகாவுக்கு சட்டம், ஒழுங்கு அமைச்சர் பதவியை வழங் குமாறு, ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவிடம், ஐக்கிய தேசியக் கட்சி பரிந்துரைத் திருந்தது. எனினும், ஜனா திபதி அந்தப் பரிந்துரையை நிராகரித்திருந்தார்.

அதன் பின்னர், ஐக்கிய தேசி யக்கட்சிதமது தரப்பில் இருந்து வேறொருவரை இந்தப் பதவிக்கு நியமிக்க முயன்றது. எனினும், ஐ.தே.கவைச் சேர்ந்த எவரும், அதற்கு முன் வரவில்லை.

இந்தநிலையில், மீண்டும் சரத் பொன்சேகாவின் பெயரை, சட்டம், ஒழுங்கு அமைச்சர் பத விக்கு நியமிக்குமாறு ஜனாதிப தியிடம் பரிந்துரைக்க ஐ.தே.க. முடிவு செய்துள்ளது.சரத் பொன் சேகாவை சட்டம், ஒழுங்கு அமைச்சர் பதவிக்கு நியமிப்ப தற்குசிறிலங்காசுதந்திரக் கட்சி யின் அமைச்சர்கள் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு மாநகர சபையின் துணை ஆணையாளர் லலித்

கொழும்பு, மார்ச் 06

கொழும்பு மாநகர சபை யின்துணை ஆணையாளராக பொறியியலாளர் லலித் விக் ரம ரத்ன நியமிக்கப்பட்டுள் ளார் என மேல் மாகாண ஆளு நர் கே.பி. லோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர ஆணை யாளராக இருந்த வீ.கே.ஏ. அனுரவை பதவி நீக்குமாறு மேல் மாகாண ஆளுநர் கே.பி. லோகேஸ்வரன் கடந்த வெள் ளிக்கிழமை உத்தரவிட்டிருந் தார்.

மீதொட்டமுல்லை குப்பை மேடு விபத்து தொடர்பில் ஜனாதிபதியால் நியமிக்கப் பட்ட தனிநபர் ஆணைக் குழுவின் அறிக்கையில், முக்கியமான ஐந்து அரசாங்க அதிகாரிகள் தங்கள் கடமை யில்இருந்துதவறியிருப்பதன் காரணமாக அவர்கள் தண்டிக் கப்பட வேண்டும் என்று பரிந் துரைக்கப்பட்டிருந்தது.

அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி செயலகத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அறி வுறுத்தல்களுக்கு அமைய கொழும்பு நகர ஆணையா ளரின் பதவியை பறித்து ஆளு நர் உத்தரவிட்டார்.

இந்த நிலையில், கொழும்பு மாநகர சபையின் ஆணையா ளராக லலித் விக்ரமரத்ன தற் போது நியமிக்கப்பட்டுள் ளார்.

(க)

## முல்லைத்தீவில் ரூ.17 கோடி செலவில் விவசாய அபிவிருத்தி வேலைகள்!

முல்லைத்தீவு, மார்ச் 06

இந்த ஆண்டில் முல்லைத் தீவு மாவட்டத்தில் சுமார் 17 கோடி ரூபா செலவில் விவ சாய அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட இருக் கின்றன என முல்லைத்தீவு மாவட்ட விவசாயப் பணிப்பா ளர் அற்புதச்சந்திரன் தெரிவித் துள்ளார்.

விவசாய மாவட்டங்களில் ஒன்றான முல்லைத்தீவு மாவட் டத்தில் விவசாய அபிவிருத்தி தொடர்பில் பல்வேறு அபிவி ருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

இந்த நிலையில் இந்த ஆண் டில் முன்மொழியப் பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கருத்து தெரிவிக் கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாகாண குறித்தொதுக்கப் பட்ட நிதியின் கீழ் 67 திட் டங்கள் அடையாளம் காணப் பட்டுள்ளன. இவை 31.29 மில் லியன் ரூபா செலவில் முன் னெடுக்கப்பட இருக்கின் றன.

இதேபோல மாகாணசபை உறுப்பினர்களுடைய பிர மாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீடுகளின் கீழ் ஐந்து லட்சம் ரூபாவும், பிரமாண அடிப்படையிலான நன் கொடை நிதியின் கீழ் அலு வலகத் தேவைக்காக 0.65 மில்லியன் ரூபாவும்,தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லி ணக்க அமைச்சின் ஊடாக 3.937 மில்லியன் ரூபாவும், விவசாயத்தை நவீனமயப்ப டுத்துகின்ற செயற்திட்டத் தின் கீழ் 123.107 மில்லியன் ரூபாவும், வாழ்வாதார அபி விருத்தி செயற்திட்டத்திற்கு உணவு விவசாய அபிவிருத்தி செயற்திட்டத்தின்கீழ் 13.4575 மில்லியன் ரூபாவும் என 173 மில்லியன் ரூபா செலவில் இவ்வாண்டில் அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப் பட உள்ளன எனக் குறிப்பிட் டுள்ளார்.

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளுக்கு ஐ.நாவில் நீதி கோரியவர்களின் விசா மறுப்பு

கொழும்பு, மார்ச் 06

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட மற் றும் இனப் படுகொலைக்கு உள்ளான குடும்பங்களை சேர்ந்தவர்கள் தமிழர் தாயக பகுதிகளில் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

இந்த நிலையில், தங்களுக்கு நீதி கோரி நேரடியாக ஐ.நா. மனித உரிமைப் பேரவை கூட்டத்தொடரில் பங்குபற்ற விண்ணப்பித்திருந்த நிலையில் அவர் களின் விசாவிற்கு சுவிஸ் அரசு மறுத் துள்ளது.

எட்டுப்பேரில் இரண்டு பேருக்கு விசா கொடுக்கப்பட்ட நிலையில் ஏனைய ஆறு பேருக்கு சுவிஸ் அரசு விசாவிற்கு அனு மதி கொடுக் கவில்லை.

இனப் படுகொலையை நியாயப் படுத்த இராணுவத்திற்கு அனுமதிகொடுக் கும் சுவிஸ் அரசு பாதிக்கப்பட் டவர்கள் தங்கள் கருத்தை முன்வைக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப் படுகின்றது.

இதன் மூலம் பாதிக்கப்பட் டவர்களின் குரல்கள் நசுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் சிவாஜிலிங்கம் உள்ளிட்ட மனித உரிமை செயற்பாட்டாளர்கள் ஐ.நா. பக்க அரங்கில் வெளிப்படுத்துகின் றமை குறிப்பிடத்தக்கது.

## கடந்த ஆண்டில் சுமார் 50 ஆயிரம் கடற்றொழிலாளருக்கு காப்புறுதி!

கொழும்பு, மார்ச் 06

தியவரதிரிய நிவாரண கடன் திட் டத்தின் கீழ் கடந்த ஆண்டு 67 பேருக்கு கடன் பெற்றுக் கொடுக்கப் பட்டிருக்கின்றது என கடற்றொழில் நீரியல்வள அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் பெறுமதி 17 கோடி ரூபாய்க் கும் அதிகமாகும். இந்த கடன் திட் டத்தின் மூலம் மீனவ சமூகம் தமது தொழிலை சிறந்த முறையில் முன்னெ டுப்பதற்கு உதவிகளையும், பாதுகாப் பையும் வழங்குவது அரசின் நோக்க மாகும்.

இந்தத் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு 17 ஆயிரத்து 831 மீன்பிடிப் படகுகள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளன.



அதேநேரம் இந்த காப்புறுதித் திட் டத்தின் மூலம் 49 ஆயிரத்து 848 பேர் காப்புறுதி செய்யப்பட்டுள்ளனர்.

## ரயிலுடன் மோதி ஒருவர் பலி

கிளிநொச்சி, மார்ச் 06


கிளிநொச்சி - பரந்தன் ரயில் நிலை யத்துக்கு அருகில் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல்11 மணியளவில் இடம்பெற்றது.

மோட்டார்சைக்கிளில் பாதுகாப்பற்ற கடவையை கடக்க முற்பட்ட நபர் மீது யாழிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயில் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

உமையாள்புரம் பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற கடவையை கடக்க முற் பட்ட போதே இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

பரந்தன் ரயில் நிலையத்திலிருந்து சுமார் 150 மீற்றர் தொலைவில்




கிளிநொச்சியில் சம்பவம்

சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நபர் வைத்தியசாலையில் அனும திக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பய னின்றி உயிரிழந்தார் என வைத்திய சாலை தகவல்கள் தெரிவிக்கின் றன.

## அரச முகாமைத்துவ சேவையில் ஆறாயிரம் பேரை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப்பரீட்சை!

கொழும்பு, மார்ச் 06

அரச முகாமைத்துவ சேவைக்கு ஆட்சேர்ப்ப தற்கான நேர்முகப் பரீட்சை நேற்று முதல் ஆரம்பமா கியுள்ளது.

அரச முகாமைத்துவ சேவையில், ஆறாயிரம் பேர் இணைத்துக் கொள் ளப்படவுள்ளனர் என அரச நிர்வாக மற்றும் முகாமைத் துவ அமைச்சு அறிவித்துள் ளது.

இதற்கான நேர்முகப் பரீட்சை நேற்று ஆரம்பமா னது. போட்டிப் பரீட்சை யில் சித்தியடைந்தவர்க ளுக்கு நேர்முகப்பரீட் சைக்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள் ளன.

நேர்முகப் பரீட்சை, அரச நிர்வாக மற்றும் முகாமைத் துவ அமைச்சில் நேற்று முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை நடைபெறும் என்று அரச இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் கே.வி.பி.எ ம்.ஜி. கமகே தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சையின் பின்னர், இவர்கள் சேவை யில் துரிதமாக இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் அரச இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் கே.வி.பி. எம். ஜி.கமகே மேலும் கூறி னார்.

(க)

# வவுனியாவில் கடந்த ஆண்டு 393 பேர் தற்கொலை முயற்சி

## வைத்தியசாலைப் பணிப்பாளர் தகவல்



கடந்த 2017 ஆம் ஆண்டு மாத்திரம் 393 பேர் தற்கொலைக்கு முயற்சித்த சம்பவங்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் பதிவாகியுள்ளன. அதேபோல் 2018 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மார்ச் 01 ஆம் திகதி வரை 35 பேர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர். இவ்வாறாகத் தற்கொலைகள் அதிகரித்துச் செல்லுமானால் எமது சமூகம் வினைத்திறனில்லாத சமூகமாக நாளடைவில் மாறிவிடும் என வவுனியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் குலலிங்கம் அகிலேந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் கடந்த வாரத்தில் அடுத்தடுத்து நடைபெற்ற தற்கொலைகள் தொடர்பாகவும், தற்கொலைகளைத் தடுப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 2017 ஆம் ஆண்டு வவுனியாவில் மாத்திரம் 393 பேர் தற்கொலை முயற்சி செய்துள்ளனர் என வைத்தியசாலையில் பதிவாகியுள்ளது. அதேபோல் 2018 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மார்ச் 01ஆம் திகதி வரை 35 பேர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர்.

எமது சமூகத்தில் 12 வயது மற்றும் 45 வயதுக்கு இடைப்பட்ட நபர்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்தக் தற்கொலைகள் நாளாந்தம் அதிகரித்துச் செல்வதைக் காணக் கூடியதாக உள்ளது. தற்கொலைகள் குறித்து பொதுமக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். சமுதாயத்தின் கட்டுக் கோப்புக்கள் எவ்வளவு சீரழிந்துள்ளன என்பதை இந்தத் தற்கொலை முயற்சிகள் எடுத்துக் காட்டுகின்றன.

தொலைக்காட்சிப் பெட்டிகள், ஆடம்பரப் பொருள்கள் வருவதற்கு முன்னைய காலப் பகுதியில் தற்கொலை என்பது அரிதாகவே காணப்பட்டது. இந்த விகிதாசாரத்தில் முன்னெப்போதும் தற்கொலைகள் அதிகரித்து காணப்படவில்லை.

போருக்குப் பின்னரான காலப் பகுதியில் வடக்கு மக்கள் அதிகமாக மனஅழுத்தத்துக்கு முகம் கொடுப்பது காரணமாகவும் இந்தத் தற்கொலைகள் அதிகரித்திருக்கலாம் என நாங்கள் கருதுகிறோம். அதேபோல் இந்தச் சமூகத்தில் உள்ளவர்கள் எந்த அளவுக்குத் தனிமைப் படுத்தப்பட்டுள்ளார் கள் என்பதும் தங்கள் சுக துக்கங்களைக் குடும்பத்தினருக்குச் சொல்ல முடியாத நிலையிலும், நண்பர்கள் உறவினருக்குச் சொல்ல முடியாத நிலையிலும் இருக்கிறார்கள் என் பதை இந்தத் தற்கொலைகள் எடுத்துக் காட்டுகின்றன.

பல்வேறுபட்ட அணியினரும் தற்கொலைக்கு எதிராகச் செயற்பட முன்வரவேண்டும். முக்கியமாக இளம் பராயத்தினர் சரியாக நல்வழிப்படுத்தப்படவேண்டும். சினிமாக்களில் மற்றும் தொலைக்காட்சி நாடகங்களில் காட்டப்படும் தற்கொலைக் காட்சிகளும் காரணமாக உள்ளன. அவ்வாறான காட்சிகள் மனதில் ஆழமாகப் பதிந்துவிடும். ஒரு நபருக்குத் தன்னால் பிரச்சினை களைக் கையாள முடியாத சந்தர்ப்பம் ஏற்படும்போது அவர் இலகுவாக இவ்வாறான முடிவுகளை எடுக்கத் தூண்டப்படுகிறார். எனவே ஒவ்வொருவரும் தங்களுக்கு பக்கத்திலுள்ளவர்களின் பிரச்சினைகளைக் கருத்தில்எடுத்து, அவர்களுக்கு எந்தவிதத்தில் உதவலாம் எனப் பழகினீர்கள் என்றால் இந்தத் தற்கொலைகளைக் குறைத்துக் கொள்ளலாம்.

பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகளுடன் மனம் விட்டுக் கதையுங்கள். அவர்களுடன் நெருங்கிப் பழகுங்கள் சில பிரச்சினைகளை உங்களிடம் பிள்ளைகள் சொல்ல முடியாமல் இருப்பார்கள். நண்பர்களாக நீங்கள் பழகினால் மாத்திரமே தங்கள் பிரச்சினைகளை அவர்கள் உங்களுக்கு முழுவதுமாகச் சொல்ல முன்வருவார்கள். பிள்ளைகளின் கருத்துக்களைக் கேட்காவிட்டால் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு ஒதுக்கப்பட்ட ஒரு சமுதாயமாக மாறும் நிலையில் அவர்கள் தற்கொலைகளை நாடவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

அதேபோல் அதிகளவான மதுப்பாவனை, அதிகளவான போதை வஸ்துப் பாவனை எமது சமூகத்தில் காணப்படுகின்றன. அதுவும் தற்கொலைகள் அதிகரிப்பதற்கு ஒரு காரணியாக கண்டறியப்பட்டுள்ளது. மது மற்றும் போதைவஸ்துக்களைப்பயன்படுத்தும் இளம் பராயத்தினர் அவைகளைத் தவிர்க்க முயலவேண்டும்.

வவுனியா பொது வைத்தியசாலையில் தற்கொலைகளுக்கு எதிராக இரண்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஒன்று - வைத்தியசாலையின் உளவள வைத்திய நிபுணரின் கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. மன அழுத்தத்தின் காரணமாக வவுனியா வைத்தியசாலைக்கு வந்து மருந்து எடுத்துச் சென்றவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் பிரச்சனைகளைக்கண்டறிந்து தீர்வுகளை வழங்கி வருகிறார்கள்.

அதேபோல் வைத்தியசாலையில் பாடசாலை மாணவர்களுக்காகத் தற்கொலைக்கு எதிரான கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளோம். அதில் போதை வஸ்துப் பாவனை மற்றும் மதுப்பாவணையைஎவ்வாறு குறைக்க முடியும்?, சமூகச் சீரழிவுகளிலிருந்து பாடசாலைச் சமூகத்தை எப்படிப் பாதுகாக்க முடியும்? என ஒவ் வொரு வாரமும் கருத் தரங்குகளை நடத்தி வருகிறோம்.

அதேபோல் சமூக சேவைகள் திணைக்களம், பிரதேச செயகம், மாவட்ட செயலகம் மற்றும் வலயக் கல்வி பணிமனை ஊடாகப் பல மட்டங்களில் தற்கொலைகளைத் தடுப்பதற்குரிய நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. - என்றார். (ஐ-100)

# உயர்தர மாணவருக்கு ‘ரப்’ வழங்குவது உறுதி

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 06

‘ரப்’ மற்றும் மடிக்கணினி வழங்கும் வேலைத்திட்டங்கள் சில காரணங்களால் தடைப்பட்டுள்ளன. எனினும் அந்தப் பணிகளை நிறைவு செய்வோம் எனக் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

குருநாகலில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எனக்கு அமைச்சு பொறுப்பு வழங்கப்பட்டதன் பின்னர், கல்வி அமைச்சு மற்றும் கல்விச் செயற்பாட்டுக்குரிய சிறப்புத்தன்மையை மேலும் விருத்தி செய்வதனையே முதல் நடவடிக்கையாக மேற்கொண்டேன்.

அதன் முதற்கட்டமாக கல்வி நிர்வாக சேவையில் காணப்பட்ட 852 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுத்தேன். புதிதாக நான்காயிரம் அதிபர்களை நிய மிப்பதற்கும், ஆயிரத்து நூற்றுத் தொண்ணூறு ஆசிரியர்களைச் சேவையில் இணைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தேன்.

மேலும் முக்கியமாக ஆறாம் தரத்துக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு ஒரு லட்சத்து ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மடிக்கணினிகளை வழங்குவதற்கான அனைத்துப் பணிகளும் நிறைவடைந்துள்ளன.

அத்தோடு, உயர்தர மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஒரு லட்சத்து 95 ஆயிரத்துக்கும் அதிகமான ‘ரப்’ வழங்கும் வேலைத்திட்டங்கள் நிறைவெய்தியுள்ள நிலையில், சில காரணங் களால் அந்தப் பணிகள் தடைப்பட்டுள்ளன. அந்தப் பணிகளை வெகுவிரைவாக நிறைவு செய்வோம். - என்றார்.

உயர்தர மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ‘ரப்’ வழங்கும் திட்டத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த மாதம் இடைநிறுத்தியிருந்தார். ‘ரப்’ ஒன்று 27 ஆயிரம் ரூபா வுக்கு கொள்வனவு செய்வதற்குஅமைச்சரவை வழங்கிய ஒப்புதலை அவர் இடைநிறுத்தினார்.

அத்துடன், ‘ரப்’திட்டத்தை நடைமுறைப்படுத்துவதால் அரச நிதி வீண்விரயமாகின்றது என்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருந்தார். (ஐ)







இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.03.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.